
# நீயும் நீயும்..
# நீயும் நானும்..



T
891.481 41
B 18 N

T
891.481
41
B18N

காவ்யா

INDIAN INSTITUTE OF
ADVANCED STUDY
LIBRARY SIMLA

CATALOGUED

'தூரதூரங்களில் என் மனசு
சஞ்சரிக்கின்றது
நான் எதை எண்ணுவேன்?...
எதைச் சொல்லுவேன்?
—ரிக்வேதம்

பாலா

# நீயும் நீயும்....
# நானும் நானும்....

காவ்யா

அன்னை பவதாரிணிக்கு
சமர்ப்பணங்களுடன்

—பாலா

T
891.481 41
B18N

89991
16-7-98

Library IIAS, Shimla
T 891.481 41 B 18 N
00089991

PRICE : Rs 12.00

○ NEEYUM NEEYUM NAANUM NAANUM
○ POEMS IN TAMIL BY BALA © BALA
○ FIRST EDITION : OCTOBER 1986

PUBLISHED BY KAAVYA, 8, SASTRI NAGAR
2nd CROSS, BANGALORE 560038

PRINTED AT NOVEL ART PRINTERS
MADRAS-14 & ORIEN., BANGALORE.

## ○ பதிப்பாளர் குறிப்பு

இவர் சென்னை பாலா. ஒரு பெண் கவிஞர்; கல்லூரி மாணவி. காமர்ஸ் படிக்கும் இவர் கவிதை எழுத வருவது சுவையானது; சுகமானது.

பொதுவாகத் தமிழில் பெண் கவிஞர்கள் இல்லை. ஔவைக்குப் பிறகு சூன்யம் தான். ஔவையும் கவித்வம் மிக்கவரா இல்லையா என்பது வேறு ஆராய்ச்சி. இந்த நூற்றாண்டில் பெண்கள் மேடையில் (கட்சிகளையும் சேர்த்துத் தான்) பேசுகிற அளவுக்கு கவிதைமோனத்தில் மூழ்கவில்லை.

பாலா சற்று வித்தியாசமானவர். புதிய பெண் கவிஞராக மலர்கிறார்; மணம் வீசுகிறார். இவரை அறிமுகப்படுத்துவதில் காவ்யா மகிழ்கிறது.

இவரை அறிமுகப் படுத்திவைக்கும் கவிஞர். பொன்மணி வைரமுத்து அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

—காவ்யா

# பொருளடக்கம்


1. காளிப்பாட்டு
2. நீயும் .... நீயும் ....
   நானும் .... நானும்....
3. மண் உண்டியல்கள்
4. சுவடுகள்
5. பேச்சு
6. இணைவிக்கு
7. ஓ! சந்திக்கப் போகின்றேன்!
   ஒரு நாளில் என்னை நான் ....
8. அமியும், உரலும்
9. தேடக்கூடாத ஆன்மா
10. தபாலில் சேராத கடிதங்கள்
11. வன்னிமரம்
12. இன்று விடுமுறை நாள்
13. பூனைத்தனங்களும் புலிகளும்
    புலித்தனங்களும், பூனைகளும்,
14. எழுச்சி
15. உயிர்க்கூடு
16. நாய்க்குடைகள்
17. பிரிய காதலருக்கு ...
18. நாட்குறிப்பேடு
19. தப்பிப்பு
20. பெண்ணடிமை
21. தப்புத்தாளம்
22. மழை
23. பகுத்தறிவு
24. தரிசனம்
25. சாம்பல் கயிறு
26. நமக்கென

—பொன்மணிவைரமுத்து

பாலாவின் கவிதைகளை மீண்டும் ஒரு முறை வாசித்தேன். முன்னுரை என்ற முகப்படாம் உத்தமலட்சணம் பொருந்திய இந்த யானைக்கு எதற்கு என்று தோன்றியது.

இரண்டாண்டுகளுக்கு முன் பாலாவின் கவிதைகளைப் படித்து விட்டு அதிர்ச்சியடைந்தவள் நான். இந்தச் சிட்டுக் குருவிப் பெண்ணிற்குள் எத்தனை முதிர்ச்சியான முகங்கள் என்ற அதிர்ச்சி வியப்போடும் ஆனந்தத்தோடும் மனதிற்குள் வேர்விட்டது. ஒரு கன்னிக்கிழவியென்று பாலாவைச் சொல்லலாம். என்ன கவிதைகள் இவை! நெருப்பும் தென்றலும் அந்தகாரத்தில் நடனமாடுகிறாற்போல...... திடீர்திடீரென்று இதழ்களை விரித்துப் பூக்கின்றன மலர்கள்; மலர்களின் மகரந்தங்களிலிருந்து அக்கினிக் கொழுந்துகளின் வீச்சு. பாலாவின் கவிதைகளை இப்படித்தான் உணர்கிறேன் நான்.

''உன்னை தரிசிப்பதாகவும் தெரிகின்றது;
இல்லையென்றும் புரிகின்றது அந்த
நிமிடத்தில் நான் என்னை நம்பவில்லை''

''கடற்கரைக்கு நடக்கின்றேன்
மணல்கள் மௌன ஞானியாய்
மகிழ்ந்து கிடக்கின்றது.
நான் சின்னக்கூட்டைவிட்டு

கொஞ்சநேரம் கடலாகவும், மணலாகவும்
கிடந்து விடுகின்றேன்''

''வைகறையின் அவசரத்தில்
சிருஷ்டிக்கப்பட்ட சூரியன் போலிருக்கின்றது
நான்''

''நீயும் நீயும் நானும்—நானும்''

என்ற தலைப்பின் கீழ்வரும் தவிப்புகள் பாலாவை ஒரு ஒரு பெண்தாகூராக்கி விடுகின்றன. கவிமனத்தின் அலைகளும் பிரவாகங்களும் மௌனங்களுமாய் ஆரவாரித்து, பொங்கி... அடங்கி ஜீவகவிதைகளைப் படைத்திருக்கின்றன.

''நான்
மின்னலால் காதலிக்கப் படுவதைவிட
சூரியனால் சுட்டெரிக்கப் படுவதையே விரும்புகிறேன்''

என்று ஒரு பேரொளியைத் தேடிக் கொண்டு போகும் மனப் பக்குவமும்,

''எந்தெந்த நிமிடங்களிலெல்லாம்
தேடமுடியாத
உயரத்தின்

விமானத்தைப் போல் இருப்பதாய்
சந்தோஷிக்கின்றேனோ
அப்போதெல்லாம்

பாதாளத்தில் அடிபட்ட துயரத்தில்
நான் இருப்பதாகக் கருதுகின்றாய்''

என்று தலைவிரித்தாடும் ஆணவத்திற்கு சுயஅடி கொடுத்துக் கொள்ளும் போதும் கவிதையின் தூயசிறகுகள் வெண்மேகங்களில் சஞ்சாரஞ் செய்கின்றன.

வாழ்விற்குத் தொடுபுள்ளியிருக்கிறது; இடு புள்ளியுமிருக்கிறது. எப்படி வேண்டுமானாலும் வாழ்ந்துவிட முடியாது. ஊமையாய் வாழ்வது சாத்தியமில்லை; பேச்சுதான் வாழ்க்கை.

''மொழிக்குப்
பேச்சு அவசியம்
ஆனால்
பேச்சுக்கு
மொழி அவசியமில்லை''

என்று பாலாவின் எழுதுகோல் ஓர் உன்னதத்தை எழுதி விடுகின்றது.

வழிபாடென்பது ஆன்மாவின் அலைவுகளை நிறுத்துங் கடிவாளம் ஒரு புள்ளிக்குள் உட்கார்ந்து ஒன்றுமில்லாததோடு ஒன்றிப்போய் எல்லோருக்கும் பயன்படும் இனிய ஆன்மாவாய் வாழும் வாழ்க்கை. ஆனால் ஆலமரத்துறவி

யிடம் மனிதர்கள் என்னென்ன கேட்கிறார்கள்?! பேரனுக்குப் பூணூல், தேர்தல் அறுவடை ஆசி என்று சராசரிகளின் சஞ்சலங்களை வேதனையோடு கூறும் போது மெல்லிய சோகம் இழையோடுகிறது.

''என்
மனசில்
உன்
கனவுகளைக் காணவில்லை
கனல்களைக்
காக்கிறேன்''

என்று இன்னோரிடத்திலும் அக்கினியை அடைகாக்கிறது பாலாவின் பேனா.

எழுதியதாலும், பேசியதாலும் பெண்ணடிமை தீர்ந்ததா எனில் தீவிரமாய் வளர்ந்தது. முன்பிருந்ததைவிடவும் மூர்க்க வளர்ச்சி; முதுகெலும்பொடிக்கும் குரூரம்.

''ஒற்றைப்பசு இழுத்து
வண்டிக்குள் காளைகள்
வேகசவாரி
குடைசாய்ந்தால் தெரியும்''

என்ற பெண்ணடிமைக் கவிதை நலிந்து, நரம்பறுந்து, நறங்கிப்போன பெண்ணினத்தை... ''சுருக்'' கென்ற கோபத்தோடு படம்பிடிக்கிறது.

''அம்மியும் உரலும்'' கவிதையில் எள்ளலும் அழகும் சங்கமிக்கிறது.

''எல்லாம் ரசனையாய்
நினைத்த பாவனையில்
பொக்கைக் கிழவி
அசமஞ்ச ஆட்டுரல்
மாவைக் குதப்பும்''

உயிர்துள்ளும் உவமையில் ஒரு சுவை தெரிகிறது.

கவிதை என்பது சொற்குவியலோ, படிமப்படிகளோ, உருவக உப்பரிகையோ அல்ல. வார்த்தைகளைக் கோர்த்து, உவமைகளை உட்காரவைத்துச் செய்யும் பொம்மை அலங் காரமன்று. கவியின் ஆவேசம். இருதயத்திலிருந்து வீசும் எதிர்பாராப் புயல். தணியாமல் உக்கிரமாய் வளர்ந்து கொண்டேயிருக்கும் ஆன்மத்தாகம். பசிகொண்டலையும் ஆன்மாவிற்கு வீறுகொண்டுபொங்குங் கவிதை நிறைவிருந்து படைக்கிறது.

வசனகவிதையும், புதுக்கவிதையும் இங்குவந்து பயன் பட்டிருக்கும் வடிவங்கள். வடிவம் கவிதையை அமைப்ப தில்லை. கவிதையே வடிவத்தை அமைத்து வைக்கிறது. உயிர்ததும்பும் வடிவமும், சாரல் அடிப்பது போன்ற சந்தமும் பாலாவின் கவிதைகளை அழகுபடுத்தியிருக்கின்றன.

எண்ணவேகத்திற்கும், உணர்வு வேகத்திற்கும் ஏற்பவே கவிதையில் சொற்களும், வடிவமும் இயல்பாயமைகின்றன. இலக்கணத்தின் கடிவாளத்திற்கடங்காத கவிக்குதிரை சுதந்திரமாய் இந்தப் பிரபஞ்சம் முழுவதும் சுற்றியலைந்து பேருண்மையைத்தேடுகிறது.

இப்போதெல்லாம்—

பிறநாட்டுக் கவிதைகளின் மூலங்களையும், மொழி பெயர்ப்புகளையும் மட்டுமே மகோன்னதமானவை என்று வாதஞ்செய்பவர்களுக்கு இந்தத் தமிழ்மண்ணின் மூலிகை வாசம் தெரிவதில்லை. கவி பாலா அப்படியொரு மூலிகை. வளர்ந்து கொண்டிருக்கும் பாலாவை கவிதை உலகத்திற்கு காவ்யா அழகாக அறிமுகப்படுத்தியிருக்கிறது.

இன்னும் பல ஆலமரங்களைத்
தனக்குள் அடக்கிக் கொண்டிருக்கும்
பாலாவிற்கு என் மனம் நிறைந்த
வாழ்த்துக்கள்.

**பொன்மணி வைரமுத்து**
**30-9-86**

## பிரபஞ்ச வெளிச்சவெளியில்...

நான்
இங்கே 'என்னை' மொழிபெயர்த்திருக்கின்றேன்.
வார்த்தைகளுக்கும், அவற்றின் சப்தங்களுக்குமிடை
என்னை இழந்து விடாமல்
என்னை முழுமையாய் மொழிபெயர்த்திருக்கின்றேன்.

அந்த நிமிஷங்களை நினைக்கும் போதெல்லாம்
கொளுத்தி வைத்த ஊதுபத்தியின்
புகையிழை போல
என்மனசு சன்னமாய் மேலெழுந்து மிதக்கின்றது.

இந்தப் பிரபஞ்சத்திற்கு அப்பாலும்
மோன நிலையில் குடி கொண்டிருக்கும்
ஜீவ அழகை,
எனது சூழலில் சந்திக்கும்
ஒவ்வொரு ஜீவனிலும் காணும்போது
பிறந்த குழந்தையின்
நுங்கு வாய் அமுதம் போல் பொங்கிவரும்
எனது ஆனந்த மயமான
அன்பு வெள்ளத்தை—ஜீவவர்ஷிப்பை
அடக்கத்தெரியாது
அதே சமயம் வெளிப்படுத்தத் தெரியாது
கரைந்து கொண்டிருக்கும் நிமிஷங்களில்
நானறியாது
என்னை மொழி பெயர்த்திருக்கின்றேன்.

மற்றவர்கள்
மானுட பிரச்சனைகளை
புலம்பிப் பாடிப்போனபோது
நான்
மானுடத்திற்காக
மானுடத்தின் ஆத்ம தாகத்திற்காக
எழுத வந்திருக்கின்றேன்.

மனிதரைப் புரிந்து செரித்த நிலையில்
மனிதர்களுக்காக எழுத வந்திருக்கின்றேன்.

ஒவ்வொரு மனிதனின் மனசுக்குள்ளும்
ஏராளமான உணர்வுகள் ஓர் வடிவம், லயத்துடன்
அலைவை ஏற்படுத்துகின்றன. அவற்றை வடிக்க
ஆரம்பித்தவன் கவிஞனாகவோ, எழுத்தாளனாகவோ
மாறிப் போகின்றான்.
சொல்பவனும் முழுசாய் சொல்லிவிடமுடிவதில்லை.

இப்படி ஒவ்வொரு மனுஷ்யனுக்குள்ளும்
ஒரு கொந்தளிப்பு, அலைவு இருக்கின்ற நிலையில்
மாபெரும் ஜீவ சமுதாயத்தைக்கொண்ட
உலகம் எவ்வளவு உன்னதமான
உணர்ச்சி மயமானது! ஒவ்வொரு
உணர்வும் சாகாவரம் பெற்றதில்லை யெனினும்,
அந்த நிமிட சத்தியம்தான். ஆனால்,
தொலை நோக்கில் இது ஒரு மாற்றமாக மட்டுமே
தோற்ற மளிக்கின்ற வேடிக்கை எனக்கு
வியப்பளிக்கவில்லை; நானும் அதன்
ஒருகூறுதானே....

உலகைப் பற்றின விவரம் தெரியாத நிலையில்,
இப்படித்தான் வாழ வேண்டுமென்ற இலக்கேயின்றி
மாறும் வினாடிகள் வெறும்
மத்தள ஓசையாய், தனி லயமின்றி இரைந்தபின்
இப்படி கூட அனுபவித்திருக்கலாம்—
அப்படியும் இருந்திருக்கலாம் என்பதெல்லாம்
பசித்தவனின் பழங்கணக்கு என்று சொல்வதற்கில்லை.

வாழ்வின் ஒவ்வொரு வினாடியும் தானே
வரையறுத்து தன்னாட்சி செய்யவேண்டுமென்ற
எண்ணம் ஒவ்வொரு மனிதனின் மனசுக்குள்ளும்
எழுதி விளக்கப்படாத குறிகோளாயிருக்கின்றது.

அப்பொழுதும் கடந்தகாலத்தை நினைக்கும்
மாத்திரத்தில்
எதையோ தொலைத்த மாதிரி,
கையில் உரித்த வாழைப்பழம் வேகமாய் வழுக்கி
மண்ணில் விழுந்ததாய் நினைத்து
அர்த்தமற்று திகைக்கின்றான்;
திகைப்பு

அடங்கும் முன்னால்
அவனையறியாது பெரிய மாறுதல்களுக்கு உட்பட்டு
கூட்டுப்புழுவின் சிறகு முளைத்த நிலைக்கு
தள்ளப்படுகின்றான். இப்போது அவனுக்கு
விருப்பமிருப்பினும், அற்றுப் போயினும்
கட்டாயமாய் பறக்க வேண்டியுள்ளது.

அப்போதுதான்
அவன் வாழ்வின் நிலைக்களனே தோற்றுவிக்கப்படுகிறது.
முதலில் சிறகு கிடைத்ததை நினைத்து
சந்தோஷப்பட்டு பறந்து பின்னால்
சிறகையே சுமையாகக் கருதி, தன்னைத்
தெரிந்துகொள்ளும் நிலையை அடையுமுன்னரே
உடல் உதிர்ந்து போகின்றது.

இந்த நிலையில்—
யார் வாழ்ந்த, வாழும் வாழ்வும் ஒரேயொரு
வரையறைக்கு உட்படுத்தப்படும் நிலையில் இல்லை.

ஆனாலும்,
தனக்குத்தானே நினைத்த வரையறை
அவனுக்கு, அவனின் குணாதிசயமாகின்றது.

அந்த நிமிஷம் யாரும் இந்த உலகில்
தன் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்க
முடியாதோவென
தோன்றிவிட்டது. சொல்லப்போனால்,
தன் உணர்வின் மதிப்பிற்கும்,
பிறர் ஏற்பாட்டிற்கும் இடையே இருக்கும்
இடைவெளியை இட்டு நிரப்புவதிலேயே
ஒரு மனிதனின் காலம் கடந்துவிடும் போலும். ஆனால்
யாரும் முரண்பாடின்றி இட்டு நிரப்பினதில்லை.

என்றைக்குமே மானுடனானவன் தன்
ஒரு கண்ணை தன் காலிலும்,
மறுகண்ணை சூழ்ந்தவர் கைகளிலும் வைத்து
வாழ்க்கையை நடத்த வேண்டியிருக்கின்றது.

நாகரீகக் கோப்பு என்ற பெயரில்
பிரம்மாவையும் தோற்கடிப்பதாய்
நிறைய முகங்களோடு உலவின பின்னால்,
நிஜமுகத்தைத் தேடித்தோற்று

தோற்றுவாயை உணர்வதற்கு முன்னால்
மண்ணாகிப் போகின்றது
மனித மனம்.

மண்ணுள் தள்ளப்பட்ட தேச காலத்தில் அவனுடைய
உச்ச நிலை அவனுடனேயே சரிந்து கடைசியில்
பள்ளம் மேடற்ற பக்குவத்துள்
உள்ளம் புகுந்துவிடத்துடிக்கும்
பிரார்த்தனை ஒன்றையே சீவனமாய்க் கொண்டு அவன்
தியான நிலைக்கு உட்படும் போதுதான்
மனித சக்தி வடிவத்திற்குட்படுகின்றது.

ஒவ்வொரு மனிதனின் மனத்திலும் பல்வேறு
எண்ணங்கள் செய்கைகள் ஆட்கொண்டாலும்
எல்லோருக்குமிடை 'அன்பு' என்கின்ற படிமம்
இருக்கின்றது.

விலங்குகள் உணவும் நிழலும் கிடைத்த நிலையில்
திருப்தி அடைந்தாலும்,
மனிதன்மட்டும் அதற்கு மேம்பட்ட
அன்பைத் தேடிக் களைத்து திகைக்கின்றான்; அது
வாழ்க்கை நீரோட்டத்தின் கரையோர பாசியில்லை;
உண்மையில் அடித்தள மணல் ஊற்று.

இந்த எண்ண இழைகள் அத்தனையும்
என்னின் பிரதிபலிப்பாய்,
என் எழுத்து நெசவினிடை ஊடுருவியிருக்கின்றது.

மண்ணுக்கும் விதைக்கும் என்றைக்கு
ஆதித் தொடர்ப்பு என்பதையோ
மொட்டவிழும் தொடர்நிலையை படம்பிடித்துவரைய
ஓவியனால் முடியுமா என்பதையோ

ஆராயமுடியுமாயின்—

எனக்கும் எனது எழுத்துக்களுக்குமிடை
பரிச்சயத்தை பளிச்சென விளக்கமுடியும்.

இவற்றை கவிதைகள் என்று சொல்வதைக் காட்டிலும்
இந்த பிரபஞ்சவெளிச்ச வெளியில்
இசைத்துக் கொண்டிருக்கும்
ஒரு ஜீவனின் விளிப்பு என
அறிமுகமாவது எனக்குப் பிடித்திருக்கின்றது.

நமக்கென ஒருநாள்
நிஜத்தின் தரிசனம் தெரியும் வரை—
விளிப்பும் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

பாலை
18-9-1986

# காளிப்பாட்டு

*பல்லவி*

கருப்பின் மீதொரு தீத்தாண்டவம் - மன
இருட்டின் பின்னொரு பிரம்மதடாகம்.

*அனுபல்லவி*

திருப் பெயர் தானிங்கு தேர்வடம் - உலக
உருப்படி அனைத்தும் வெறும்நாடகம்.

*சரணம்*

உனைத்தான் காளி அடைகாத்தேன் - உயிர்ச்சாறென
நினைத்தே ஒளிர்த் திருந்தேன்.

தனக்குள் வேள்வித் தீவளர்த்தேன் – கரும்பென
எனக்குள் களித்தி ருந்தேன்.

ஒரு நாள் நின்றன் சோதிமுகம் - என்னுள்
உயிராய் உயர்வாய் கலந்திடுமே.

**நீயும்...... நீயும்......**

**நானும்...... நானும்......**

கிழக்கில் வெளிச்ச ரேகைகள் வித்யாசப்படுகின்றன.
பறவை பறக்கின்றது; சிறகு அசைகின்றது.
காற்றை உணர்கின்றது; கூடுதேடுகின்றது.
வேடனின் அம்பு அதன் உடலைத் துளைக்கின்றது.
அது வெளியே வருகின்றது.
அது?!.........

உன்னை நினைக்கும் போதெல்லாம்
உணர்வுகளில் சிலிர்த்துப் போகின்றேன்.
அந்த அந்தியின்
அந்தகார இருளில்
குத்து விளக்கேற்றி என்னில்
விளரிப்பண் வாசிக்கின்றேன்.
வரவேற்பை எதிர்ப்பார்க்கின்றேன்.
வரவில்லை; பண் முகாரியில்தான் முடிகின்றது.

மறுநாள் பரிதி
பாதி உலகைப் பார்த்துவிட்ட
பெருமையில் புன்னகைக்கின்றான்.
அவனில் நானாகின்றேன்;
புற்கள் வெளிச்சக் குளியலில்
வெள்ளை கீதமிசைக்கின்றது.
கண்களால் நன்கு பார்க்க முடிகின்றது.

விடியலில்
விடிவிளக்கு அணைந்து போகின்றது.
அதன்
கடைசி ஆவி
காலைக்காற்றோடு கலக்கின்றது.
நான் மூர்ச்சையாகின்றேன்.
விழித்து எழும்போது
வேண்டாத கீதங்கள்
இசைப்பதுபோல் தோற்றம்.
அங்கேயும் நான் எதிர்ப்பார்க்கின்றேன்.
வெறும் எதிர்ப்பார்ப்புதான்.

காலைச் சூரியனுக்கு
அவசர ஆகாரம்
புற்பனிகள். அவன்
விசுவரூப தரிசனம்
வேண்டாத போதே காட்சியளிக்கின்றான்.

தோட்டத்தில் ரோஜா கண்ணீர் சிந்துகின்றது.
வேலியான முள்ளே இதழைக் கிழித்து விட்டது.
மறுபடியும்
அதே அந்தியின் அந்தகார இருள்.

நானும் உன் நினைவில்
கல்யாணியில் கலந்து போகின்றேன்.
அங்கே குத்துவிளக்கு வந்தது.
ஏற்று என்றது.

இன்றைக்கு
சுருதிசாகரத்தில் சோர்ந்து போகின்றேன்.
எல்லையில்லா
அண்டவெளிச்சத்தில்
அயர்ந்து போகின்றேன்.
பகலுக்குப் பின் இரவா?
இரவுக்குப் பின் பகலா
வெளிச்சத்துக்குப் பின் இருட்டா? இல்லை-
இருட்டுக்குப் பின் விடியலா?
அயர்த்துப் போன போதெல்லாம்
அந்தக் கேள்விகளைக் கேட்கின்றேன்.
பதிலை எதிர்ப்பார்கின்றேன்.

குத்துவிளக்கு சொன்னது:

'விடியலுக்கு அடியில் கருமை; ஆனால்
இரவுக்குப் பின்தான் பகல்!'

உன்னை என் கைகளில் பிடித்துப் பார்க்க
வெகுநாளாய் ஆசை.
குத்து விளக்கின் சுடரைப் பிடிக்கின்றேன்.
கைக்கு வரவில்லை.
இப்போதும் சொல்லுகின்றேன்
நீ அதிலும்தான் இருக்கின்றாய்
ஆனால்
சுடர் என் கைக்கு வரவில்லை.

நான் இருட்டில் நடக்கும் போது
நீ கைப்பிடித்து அழைத்துச் செல்லுகின்றாய்.
நான் பகலில் செல்லும்போது
என் விழியின் ஒளியாகின்றாய்.

உன்னில் உருகும் போது
வீணையில்
விரல்களைப் பதித்து வாசிக்கின்றேன்.
அதைவிட
இதயம் உன்னை வேகமாக வாசிக்கின்றது.
இப்போது எனக்குப் புரியவில்லை
நான் எதை வாசிக்கின்றேன் என்று.
அப்படியே ஆழ்ந்து போகின்றேன்.

உன் மிருதுவான
பஞ்சுப் பாதங்களை
பற்றிக் கொண்டேயிருக்க
எனக்கு ஆசை; ஆனால் —
உன் ஆலாபனை செய்யும் போதெல்லாம்
கால்களையே காண முடியாது போய் விடுகின்றது.

சுவர்க்கோழி கூவித்தீர்க்கின்றது;
பகலில் நான் அறிவதில்லை.
வைரம் பாய்ந்த
கருங்காலியைப் போன்று நீ
கம்பீரமாக நிற்கின்றாய் அப்போதும்
உன்னையே நான் இசைக்கின்றேன்.

இன்று உன் தத்துவ நிலையில்
நீ மோனித்திருக்க
நானும் மௌனித்து நிற்கின்றேன்.
வார்த்தை வர ஆசை.
ஏதோ எசமானனிடம் சலுகை கேட்கப் பயந்து
ஒடுங்கும் வேலைக் காரனைப் போல
காணப்படுகின்றேன்.
உன்னை தரிசிப்பதாகவும் தெரிகின்றது;
இல்லையென்றும் புரிகின்றது. அந்த
நிமிடத்தில் நான் என்னை நம்பவில்லை.

உனக்குப் பிடித்த
பைரவியை பாட முயல்கின்றேன்.
ஆனால்-
சிலந்தி அறுந்த வலை கட்டப்பார்த்த கதைதான்.

ராஜனே! ராகங்களின் ராஜனே!
நான் எத்தனை ராகங்களை
என் தம்பூரையில் இசைத்தாலும்
என் மனசில் முழுசாய்
உன்னை இசைக்க முடியவில்லை.
நீ ராகமில்லாத பாடல்!
உலகத்தில் அத்தனை சுருதியையும் கூட்டி
பாடினாற் போல்
நீ என்காதில் விழுகின்றாய்.
உன்னை உச்சரித்த பின்
என் உதடுகளுக்கு
மோனந்தான் முக்கியமாய்ப் போகின்றது.
உன்னை உச்சரிக்கத்தான் முயற்சிக்கின்றேனே தவிர,
ஸ்பரிசிக்கத்தான் நினைக்கின்றேனே தவிர,
கண்களால் காண முடியவில்லை,

நீ மன்னன் மாளிகையின் சரவிளக்காய்,
சுவைத்திருப்பதற்கு பதிலாய்
ஏழைவீட்டு எளிய மெழுகுவர்த்தியாய்
மௌனித்திருக்க ஆசைப்படுகின்றேன்.
அந்தச் சுடரில்
உன்னை பார்க்க முயற்சிக்கும் போதெல்லாம்
நீ எனக்கு
மௌனப் பாடந்தான் சொல்லித் தருகின்றாய்.
மற்றவையெல்லாம் மறந்து போகின்றேன்.

பிரபுவே!
உனக்காக பெரிய யாகம் நடந்தது
பிரபுவே!
அவரவர் விருப்பப்படி காணிக்கை அளித்தனர்.
எனக்கு எதுவுமே புரியவில்லை
எதைத் தருவதென்று.
யோசனை ஒன்று தோன்றியது.
எனது மனம் மலிவானதாய்ப் பட்டது.
அதிலிட்டேன்.
அதைத் தொடர்ந்து வைத்திருந்தால்
சஞ்சலந்தான் சஞ்சரிக்கும்.
அப்பொழுது அக்னிதேவன்
அதை ஏற்க முடியவில்லை
ஆக்கிரமிக்க முடியவில்லை.
நீ உன் உள்ளத்தில் கொண்ட
ஆபரணமாயிற்றே அது.

வானம் இன்று புதுமையாக தோன்றினது.
மேகங்களெல்லாம் விழுந்துவிடுவேன் என்று
பயப்படுவது போல் தோன்றினது.
ஒரு மேகம்
அஸ்தமன சூரியனை மறைத்தது. அது
மாலைச் சூரியன்தான்.
ஆனால் ரேகைகள் நிச்சயமாய் மறையவில்லை.
பிறகும் பிரகாசித்தது.
உண்மைதான் நிதர்சனம் அங்கே.

வானம் பெருவெளி; வையம் பெருவெளி.
நீயும் பெருவெளி - நானும் பெருவெளி.
இங்கேதான்
ஜீவன் தத்துவமானது, ஜனித்தது எல்லாம்.
எல்லையற்ற அமைதியான சக்தி
எங்கும் பெருவெளியாய்
பரந்து கிடக்கின்றது.

கடற்கரைக்கு நடக்கின்றேன்.
மணல்கள் மௌனஞானியாய்
மகிழ்ந்து கிடக்கின்றது.
அடுத்தாற்போல் அங்கே
அலைகளின்
ஆரவார இரைச்சல்; அதற்கு
மணலின் மௌனத்தின்மேல் ஆத்திரம்.
மணலுக்குள்ளும் கடலுக்குள்ளும் கூட
ஆன்மா அகண்டு கிடக்கின்றது.
ஜீவதத்துவம்
இங்கேதான் போதிக்கப் படுகின்றது.
நான் சின்னக் கூட்டைவிட்டு
கொஞ்சநேரம் கடலாகவும், மணலாகவும்
கிடந்து விடுகின்றேன்: அப்போது
மானுட வித்யாசமின்றி,
நானும் பெருவெளியாய்
காற்றோடு கண்மூடி,
கடலோடு இரைச்சலாய்,
மணலோடு மௌனமாய் இருந்து விடுவேன்,

இங்கே
போலிக்காக போராடுகின்றார்கள்:
இவர்கள்
நிஜத்துக்கு முன்னே
நிதர்சனமாயிருக்க விரும்பவில்லை.

நிறைய நிமிடங்களில்
அநாதியாகி இருந்திருக்கலாமோ என்று
எண்ணியிருக்கிறேன்; ஆனால்.
இங்கே யாரும் அநாதியில்லை.
யாரும் தனியான தெய்வமில்லை.
நீ என்னிலிருக்கின்றாய்;
நான் உன்னிலிருக்கின்றேன்.
காற்றின் சலனத்தில்,
குழந்தையின் ஜனனத்தில்,
கிழவனின் மரணத்தில்.........
இன்னும் நெருப்பில், இருட்டின் கருப்பில்,
இதை உணர்கின்றேன்.
காலையில் குயிலின் கீதத்திற்கு
தம்பூரையில் சுருதி சேர்கின்றேன்.
சேர்க்க முடியவில்லை.
குயிலின் கீதம் வரையறையில்லாத வேதம்.

வைகறையின் அவசரத்தில்
சிருஷ்டிக்கப் பட்ட சூரியன் போலிருக்கின்றது—
நான்.
அந்த நிமிடத்தில்
ஒவ்வொரு ஜீவனின்
உணர்விலும் உயிர்த்துத் தெரிகின்றேன்
உன்னிலும் கரைந்துவிட நினைக்கின்றேன்.
ஆனால், நீ சூரியனிலும் இருக்கின்றாயே?
இப்போதெல்லாம்
நான் உன்னை உடனேயே
அடிக்கடி உணர்ந்து போகின்றேன்.
நல்ல தென்றலில்,
பெரிய புயலில், மின்னல்கீற்றில்
இன்னும்...... இன்னும்......

சிலசமயம் நான்
விசித்து விசித்து அழுகின்றேன்.
நீ என்னை
விளையாடவிட்டு வேடிக்கைப் பார்க்கின்றாய்.
விளையாடும் போது
சின்னச் சின்ன சிராய்ப்புகளும்,
கடுமையான காயங்களும் ஏற்படத்தான் செய்கின்றன.
ஆனால், நீ
அப்போது
அழகான தென்றலில், இதமான சிரிப்பில்
உயிர்த்துத் தெரிகின்றாய், நான்
அப்புறம் காயத்தை கொஞ்சமும் மதிப்பதில்லை.
உன்னையே
ஆதார சுருதியாகக்கூட்டி வாசிக்கின்றேன்.

நான் தினமும்
என் சாரளங்களை நீரால் கழுவி
உன்வரவை எதிர்ப்பார்க்கின்றேன்.
ஆனால், உன்னை
திரைச்சீலையின் சிலிர்ப்பிலேயே
உணர்ந்து போகின்றேன்.

வெளிச்சம் இருக்கும் வரைதான்
நிழலும் தொடர்கின்றது.
நானும் வெளிச்சமாய்......
நீயும் அதன் ஒளியாய்......
அந்த லேசான வெப்பசூழலில்,
நீயும் நானும்......
நானும் நீயும்.....
நீயும் நீயும்......
நானும் நானும்......
நானும்......
நீயும்......

●

○ மனத்தின் அதிர்வுகள்
மௌனப் பள்ளத்தாக்குகளின்
புல்வெளியை வருடிக் கொண்டிருக்கின்றது.
நிச்சயம் இது சோகமான நேரமல்ல.
சலனமே இல்லாத, காற்றேயில்லாத
இடத்தின் ஒளியைப் போன்று
தீர்க்க முடியாததாயிருக்கின்றது.

அந்த இரவில்
சந்திரன் தூரிகையில்லாமலேயே
தொடும் உணர்வின்றி
கடலின் நீலநிறத்தில்
தன்னின் வெண்மையை
கலக்கக் கொண்ட
கள்ள எண்ணத்தில்
தோற்றுப் போகின்றது.
ஆனாலும்
கடலுக்கு
அந்த நிமிட மினுமினுப்பு
கிடைத்துப் போகின்றது. இதற்கிடையில்,
ஒரு மேகம் திருஷ்டியால் மதியை
மறைக்கின்றது. மதி தோல்வியை
ஒப்புக் கொள்ள முடியாது தவிக்கின்றது.

○ இதையெல்லாம்
பார்த்த பின்னும்
மனம்
ஒரு நிறமியாய் ஆசனித்திருக்கின்றது.
கண்களில் என்னவோ நீர்த்தாரை.
அது ஏன்?
உன்னைத்தான் கேட்கின்றேன் – நீ
பதில் சொல்லாமல் உன்
பாதங்களைப் பார்த்துப்
புன்னகைக்கின்றாய்.
அது கழுவப்பட்டிருக்கின்றது.
நான் ஏன் எனக்கே தெரியாது
மௌனியாய் அழ வேண்டும்?
அழவைக்கின்றாய்?
அந்த முத்துக்களை
எண்ணிச் சலித்துப் போகின்றேன்.

ஒன்று நீ என்னில்
சங்கமித்துவிட வேண்டும்;
அன்றி
நான்
உன்னில் கரைந்து போக வேண்டும்.
எது சரி?
எதற்காக
நான் அழவேண்டும்?
உன்னில்
கரையத் தெரியவில்லை என்பதற்கா?
இப்படிக் கேள்விகளைத் தொடுத்து
ஆரங்களை
அணிவித்துவிட வேண்டுமென
வெறியோ?

அப்போதுதான் பார்க்கின்றேன்.
என் கண்ணீர்துளிகள்
உன் கழுத்தாரத்தின்
மாணிக்கங்களாய் மாறின
ரசவாதத்தை.
அப்புறம்
கேள்விகளையே மறந்து போகின்றேன்.

ஓ!
கண்ணீருக்கு கிடைத்த பெருமை
எனக்கு என்றைக்கோ?

○ பரந்த புல்வெளியில்
மாடு மேய்ப்பவனும்,
ஆட்டிடையனும் அவற்றை
ஓட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.
காடுதான்.
ஆனாலும்,
ஆட்டிடையன் இருக்கும் எண்ணத்தில்
அச்சத்தின் பிடிப்பேயில்லாது
புற்களைத்
தேர்ந்தெடுத்துச் சுவைக்கின்றன.

நீயும் ஆட்டிடையன்;
மாடுமேய்ப்பவன்
ஆயினும்
உன் ஆடுகள்
தன்னுடையது
என்ற
எண்ண வலையில் சிக்கி
தன்னை ஏன் இழந்து போகின்றன?

○ ஈரமணலில் அலைகள்
தனதாடையைச்
சரி செய்து கொண்டிருக்கின்றன.
நானும் நடக்கின்றேன்
சுயேச்சையில்லாமல்.
கால் சுவடுகள் பதியும் போதெல்லாம்
ஏதோவொன்றை
சாதித்ததாய்
சந்தோஷப்பட்டுப் போகின்றேன்.
ஆனால், அலைகள்
தனது ஆடையை
சரி செய்து கொள்ளும் சாக்கில்
அவற்றை அற்பமாக்கி விடுகின்றதே?

○ கடல் முகிழ்து பெரியதொரு
முத்தொன்றை அகழ அவா.
ஆனால் கரையில் அமர்ந்து
ஆழத்தை
அளந்து கொண்டிருக்கின்றேன்.

எனக்குத் தெரியும்:
தோற்ற மேயில்லாமல், எண்ணமின்றி
முத்தை எண்ணி முகிழ்ந்தால்தான்
அதுகிடைக்கு மென்று. ஆயினும்
இன்றும் ஆழத்தையே
கணக்கிட்டுக் கொண்டிருக்கின்றேன்.
காரணம் தெரியாது
கரைந்து கொண்டிருக்கின்றேன்
ஏகாந்தத்தின் ஏகாதிபத்தியத்தில்.

பிறகுதான் புரிகின்றது –

கடலைத் தேடி வந்து விட்டு
கடற்காற்றிலேயே
மயங்கிப் போகின்றவள் என்று.

89991

○ எனக்கினியவன் நீ,
அற்பனாய் காட்சியளித்தபோது
அற்புதம் என்றேன்; நீ
அற்புதமாகவே மாறிப்போனாய்.
நீ நீலமாய் நின்றாய்.
வெறும் வெண்மைதான்
எனச் சாதித்தேன்.
வீழ்ச்சி உனக்கில்லையென்றாய்;
வெண்மையாகவே நின்றாய்.
நீ ரொம்ப, —ரொம்பவும் பொல்லாதவன்.

உடல் மேல் உயிர் மேவுவதுபோல் என்
உள்ளத்தில் அலைகின்றாய்.
வந்ததுதான் வந்தாய்—
கூடுவிட்டு கூடு பாயும் வித்தையை
மறந்து விட்டு வருவதுதானே?
வந்த வேகத்திலேயே
வேறுதிசை நோக்குகின்றாயே?

○ மாமரத்திலே காய்த்திருக்கின்றன காய்கள்.
சில வெம்பினவை, அதற்காக
மரத்தையே மதி கெட்டதாய்
மறுத்துவிடாதே தலைவா!
அப்போது தான்
உன்னுடைய ஸ்பரிசம் எனக்குக் கிடைக்கும்.

○ ஒவ்வொருநாளின்
இரவு உறக்கத்திற்கு முன்னாலும்
உன்னைச் சந்திக்காமலேயே
நெடுந்துயில் ஆழ்ந்து விடுவேனோவென
நடுங்கிப் போகின்றேன்.
நேற்று
அந்த சார்வ வனத்திடை
மூங்கில் மரத்துக் கிளையில்
பெயர் தெரியாத
பெண்பட்சியொன்று
சோடியின் சிறகணைப்பில்
வசமாகித்
தன் குரல் சிலுப்பியதே-
அதைக்
கேட்ட பின்னும்
உயிர் தரித்திருக்கின்றேன்.
—நீ வருவாய் என்ற எண்ணத்தில்.

எனதே,
தாங்க இயலாத
தாபத்தில் பேசுகின்றேன்.
நான் உன்னைக் காதலிக்கின்றேன்,

○ உன்னைப்
பலமுறைப் பார்த்து
சந்தோஷப் பட்டிருக்கின்றேன்.-
பரவசப்பட்டி-ருக்கின்றேன்.
அந்த
ஆனந்தம் அளவிடற்கரியது. ஆனால்
மறைந்தபின் பிறப்பிக்கும்
சூன்யமிருக்கின்றதே
என் கண்களை,
கண்ணீரோடு சேர்த்து
விலைபேசி விடுகின்றன.
எனக்கு
எது தேவை, தேவையில்லை
என்று தெரியவில்லை. ஆனால்
ஒன்று மட்டும் சர்வநிச்சயம்.

நீ......
நீ மட்டுமே எனக்குத் தேவை.

○ இந்த மலரை அர்பணித்தால்,
சூட்டிக் கொண்டாலும்,
பூட்டிக் கொண்டாலும்
காலடியில் மிதித்தாலும்
எல்லாம், அதனுடைய பாக்கியம்தான்.
ஏனெனில்
அதன் அவசரத்தேவை நீ.

என்றைக்குமே
உலக நிலைகளுக்காக
இரந்து நின்றதில்லை.
இன்று கேட்கின்றது,
மண்டியிடுகின்றது—
காலில் 'சுயம்' என்பதை
மிதித்துப் போட்டுக் கொண்டு.
இதோ அரவணைக்க வா!

○ உனக்காக இந்த
அற்பப்புல் அறைவாசலில்
அரற்றுகின்றது.
அற்பப்புல்தான். ஆனால்,
பயிர்களுக்கு நடுவே
வேரறுக்கும் களையல்ல.

அந்திமகாலத்தில்
உனக்காய்
இடம் ஒதுக்க
இந்த இதயம் பிரயாசைப் படவில்லை.
'இதயமே நீதான்' என
ஏங்கிக் கிடக்கின்றது.

○ எல்லோரும்
இன்றைய நாள் விடிந்ததுஎன்றபோது
என்னின் அந்திமம்
உரைக்கப் பட்டுவிட்டதாகவே எண்ணினேன்.
நம்பிக்கையோடு நடக்கின்றேன்.
எனக்கும் விடியல் இருக்கும்.
நீ வரும் போது......

○ வழிப்போக்கனொருவனுக்கு
சூரியனைப் பார்த்துரையாற்ற ஆவல்.
போகின்றவர்களிடம் கேட்டான்;

'எப்படிச்சந்திப்பது'? என்று.

'கிழக்காலே போ' என்றார்கள்.
போய்க் கொண்டிருந்த போது
சிலசமயம் சிரிக்கின்றான்;
மறுசமயம் மறைகின்றான்.
இன்னும் கண்டு அவாவவில்லை.
இருந்தாலும் மானச ஒத்திகை.
'ஒரு நாள் காண்போம்' என்ற
எதிர்பார்ப்பில்.

○ மரங்களென்னவோ முணுமுணுக்கின்றது.
காற்று தள்ளத்தள்ள
நான் அசைந்து கொண்டிருக்கின்றேன்.
விதிக்கப்பட்டதாய் வாழ்கின்றேன்;
வேறொன்றுமில்லை.
சுயேச்சை என்பதே
சுதந்திரப்படவில்லை.

மனிதர்கள் கூட
மலைத்துப் போகின்றனர்.
இத்தனை நேரப் பூக்களை
எப்படி
முட்களாய் உதிர்த்தோமென்று?

ஓ! நீமட்டும்,
நீ மட்டுமே சலிக்காது
இதய சாரளங்களில்
சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றாய்.

○ நான்
மின்னலால் காதலிக்கப்படுவதைவிட
சூரியனால் சுட்டெரிக்கப்படுவதையே விரும்புகிறேன்.

காற்றாலே உந்தப்பட்ட
மேகத்தினின்று
மழை சுரக்கின்றது.
இப்புவியின் பொருட்களிலெல்லாம்
ஆரோகணிக்கின்றது.
ஒரு பாரிஜாதத்தின். மகரந்தத்தில்
ஒரு மழைத்துளி
விழுந்து தெறித்தபோது
தானே
அத்துளியை உத்பவித்ததாய்
அந்த பூவிற்கொரு எண்ணம்.

ஆயின்,
என்னை பாரிஜாதமாக்கிவிடாதே.

○ அங்கே சன்னமாய் எரியும்.
விளக்கிற்கு வலை வைத்தார்கள்
வேகக்காற்றை தடுத்து
வெளிச்சமாய் எரிவதற்கு.
நன்றாக எரியும் நோக்கில் வைத்த வலை
நிரந்தரத்திரையாய் போய்விட்டது அந்த
நெய்விளக்கின் சுவாசத்திற்கு.

ஆயின்—
நான் அந்த விளக்காக வேண்டாம்.

தென்றலோ, புயலோ,
எரியும் நேரம் எதுவாயிருந்தாலும்
என் நெஞ்சம் என்றுமுனக்கே.

○ இப்போதெல்லாம் எனக்கோர் சந்தேகம்!
நீ நிஜமாகவே
உண்மைதானா?
உண்மையின் விளிம்பில் இருப்பதாய்
உத்பவித்த கற்பனையில் ஏங்குகின்றேனோ?
நீ நிஜமாகவே நிஜம்தான்

ஆனால் சந்தேகத்தின் காரணம்.—
அமிர்தத்திற்கு ஆசைப்பட்டு
அழுகின்ற குழந்தைக்கு
அவ்வப்போது இனிப்பு வகைகளையே
அமிர்தமாக்கி
சரி செய்கின்றாயே?
சம்மதமா? தூண்டு கோலா?

இப்பவும்
எழுதுகின்ற மடல்களெல்லாம்
உன்னிடம் சேர்ந்ததாகவே நம்பிக்கை.
ஆனால்,
ஏனிப்படி கல்நெஞ்சனாய், கருணையற்ற
கருமி போன்று கூத்தடிக்கின்றாய்?
கற்பூரம் எப்படி
மிச்சமின்றி எரிகின்றதோ, அங்ஙனம்
உன்னில் கரையவேண்டும்.
கோயிலின் கோபுரம் பார்த்து
திருப்தியிடும் பக்தனில்லை நான்.

○ இரண்டில் ஒன்று
சர்வநிச்சயமாய் சொல்லிவிடு.
தனிக்கூட்டில் தவிக்கும் குஞ்சிற்கு
தாயணைப்பு கொடு.
அன்றி, குஞ்சே
பறக்கத் தெரியாது விழுந்து உயிர்விடும்.
ஏனெனில்
தாயில்லாத உயிர் தேவையில்லைதான்.

இந்த இரண்டில் ஒன்றை
சர்வநிச்சயமாய் சொல்லிவிடு.
இந்தப்பூ சூடின பின்னும்
வாடாது நிலைக்க வைக்கும்
தலைவருக்காய் தயாராயிருக்கின்றது.
தலைவர் வரவில்லை.
கிளையில் பிணைக்கும் எண்ணமின்றி,
தரையில் விழவும் துணிவின்றி
இந்தப்பூ
துயரத்தின் ஏற்பாட்டில் காத்துக்கொண்டிருக்கின்றது.
உன்பார்வை படட்டும்.

○ இந்த பரந்த புல்வெளியில்
எத்தனையோ புட்கள்
இரைக்காகவே சிறகு விரிக்கின்றது.
ஆயின்,
இந்தப்பறவை
சிறகுகளே சுமையாகச் சிந்திக்கின்றது.
இதை உன் இதயத்தில்
சிறைவை எனச் சொல்லவில்லை;
ஆயின்,
என்றேனும் ஓர் கருணைச் சொட்டில்
வெளியேற்றிவிடலாம்.

தயவு செய்து நீயாகவே ஆக்கிக் கொள்.

ஒவ்வொரு உள்ளுணர்விலும்
நீ பிரகாசிக்கின்றாய். எனினும்
உனக்குள் இது
சுடரிடப் போவது என்றோ?

○ தாங்கமுடியாத விரகதாபத்தில்
தேடுகிறேன் உன்னை.
எங்கே போனாய் நீ?
எங்கே போனாய் நீ?
கேள்விகளை எதிரொலிக்கவிட்டு
மூலத்தை மறந்து போகின்றாயே?
உன் புல்லாங்குழலுக்கு கிடைத்த
ஸ்பரிசங்கள்
என்றைக்கு எனக்கோ?

இந்த தாகத்திற்கு ஏற்ற
சுனை நீதான் என
அறிந்தும்
'என் நீர் விஷம்' என்பதாய்
நாடகம் எதற்கு?

நிற்கும் பூமியை சுண்டுவிரலால்
நகர்த்தி விடும் அகத்தை
காலில் கீழ்
கருக்கிப் போட்டுக் கேட்கின்றது.
''நாடகம் எதற்கு''.

○ எந்தெந்த நிமிடங்களிலெல்லாம்
தேடமுடியாத
உயரத்தின்
விமானத்தைப்போல் இருப்பதாய்
சந்தோஷிக்கின்றேனோ,
அப்போதெல்லாம்
பாதாளத்தில் அடிபட்டதுயரத்தில்
நான் இருப்பதாகக் கருதுகின்றாய்.

காரணம்
அந்த சந்தோஷம்
நிஜமான ஆனந்தமல்ல.

இங்கே
எவ்வளவு உயர உயரக் கிளம்பினாலும்
காற்றாடிக்கு அதன்
நூலின்நீளம் தடையாயிருக்கின்றது.
நூலே வேண்டமென மறுதலித்து
வெளியிடம் விஷயத்தை வெளிப்படுத்தினால்
அந்த நொடியில் பட்டம்
அங்கிருப்பதில்லை.
பறக்கும் வேகத்தையும்
பார்ப்பதில்லை.

○ இங்கே சிலசமயம்
கடலே தன் அலைகளை
வலையாக்கி மீன் பிடிக்கின்றது.
வலையே பொய்யானதென
உணர்ந்த மீன்கள்
சற்றேனும் சலனப்படுவதில்லை.
சாவு நெருக்குவதில்லை.

சரீரத்தின் மீது
சர்வ நம்பிக்கை வைத்தவன் எவனும்
அநித்தியத்தை நெருங்கி விடுகின்றான்.

○ சந்தோஷமாயிருக்கும் நேரமெல்லாம்
பொதுவாய்
சுதந்திர வெளியில் பரப்பதாய்
ஞாபகம்.
இறக்கையே இல்லாது பறந்து
இலட்சியத்தைத் துளைத்து
எங்கோ மரக்கிளையில்
நிமிர்ந்து நடப்பதாக நம்பிக்கை.
உண்மையில்,
உண்மைச் சுதந்திரம் என்பது என்ன?

காற்றுநீரின் கூட்டதிர்வில்
மேகத்தின் தோற்றம்
எங்ஙனமோ, அங்ஙனமே
சந்தோஷம், சௌந்தர்யம் எல்லாம்.
வெறும் தோற்றம்தான்.
முக்கியத்துவம் கொடுக்காவிட்டால்
மரணம் சமீபிப்பதில்லை.

எதற்குமே 'சுயம்'
என்பதில்லா நேரங்கள் இவை.
இதில்
ஒன்றின் சுயம் மட்டும் சகதியாவதில்லை.
அது
உனக்கும் எனக்கும்
உள்ள பரஸ்பரம்.

○ பாலிலே குளிப்பது,
பிச்சையெடுப்பது எல்லாம்
தோற்றத்திலேயே பொருந்திவிட்டன.
அவை ஒன்றுக்கொன்று
சல்லாத்துணியின
சரிகை வேலைப்பாடு மாதிரி.
ஒன்றையொன்று
அடர்ப்பிக்கும்; அழகுபடுத்தும்.

அழகு என்றால்,
பரிமளிப்பதுதான், கவர்வதுதான்,
சுவைப்பதுதான், சுகிப்பதுதான் அழகா?
எனின்
கசப்பும் ஒருசுவைதானே?

இந்த உலகாயதங்களில்
எதுவுமே அழகில்லை.
ஆனால், எல்லாவற்றிலுமே அழகு.
கசப்பு, துடிப்பு, வேதனை, சோதனை
இன்னும் எல்லாம்...... எல்லாம்......

○ எந்த ராகத்திலும் கொஞ்சமும்
ஸ்வரம் குறைந்தால்
வேறொருராகசாயல்
கொண்டு விடுகின்றது—
குரங்கின் வால் மறைந்தால்
மனிதன் தோற்றம்போல.
அதற்காக
சங்கீதம் இல்லையென மறுப்பதற்கில்லை;
வால் மறைந்ததற்காய்
உயிர் போவதில்லை.
நிஜத்தில்
சங்கீதம், உயிர் இவைதான்
சத்தியம், பரமம்.
எனக்கோர் ஏமாற்றம்.
இதுவாகவே
நீ இருப்பதென்றாலும்
ஏனிப்படி
அடிக்கடி
தானே தூண்டில் தயாரித்து
மாட்டிக் கொள்வதைப் போல்
மந்திரமாடுகின்றாய்?

தெரிகின்றது—

அந்தத்தூண்டிலும்
நனைக்கப்பட்ட நீரும், நீதான்.
பிரிக்க இயலாத நிலையை
உனக்குள் ஆட்படுத்திவிட்டாய்.
அதைச்சுற்றி யொரு
சகதிப் போர்வை; மனோமயம்.

சக்தியைச் சுற்றி
சகதி இருப்பதால்
சௌந்தர்யம் போய்விடுவதில்லை;
இதுவாகவே நீயிருப்பதால்.

அன்பே! உன்னைப் பார்த்ததால்தான்
பிரியத்தின் பொருள் புரிந்தது.
அன்பின்
அதிர்வு வியாபித்தது.

உள்ளுக்கும் வெளிக்குமிடையே
போரிடாமலேயே போக்க முடிந்தது.

சூரியனுக்கு தன்
சுயகம்பீரம் தெரிவதில்லை:
தெரிந்த பின்னும், தெரியாதவனாய்
தோய்ந்தெழுபவன் தான்,
நீ!

அப்பொழுதங்கே
அலைவு, அதிர்வு,
சுருதி, சங்கமம் எதுவுமில்லை.
இனிமாற்றம் மட்டும்; வெறும்.

**மண் உண்டியல்கள்.**

**சுவடுகள்**

○ தோற்றத்திற்கும் தோய்வுக்கும்
இடைவெளியில்
ஒரு சத்தியமான பரவெளியில்,
விளக்க இயலாத வெளிச்சத்தின்
சுவாசம் மேன் மேலும்
சௌந்தர்யித்துக் கொண்டேபோக
ஒரு பூ அதுவாகின்றது.
கவனிக்கப்பட்டது.
அந்தப் பூவும்
சின்ன சூரியன் போல்.
சூரியனுக்குள்ளும் சாந்தம் உண்டு.

அந்த நிர்மலத்தில்
தோய்ந்து எழுந்ததில் விடுபடாமலேயே
சூரியன் மேலேறப்பார்க்கையில்,
வனங்களிடையேயும்,
வசந்தங்களிடையேயும் தன்
கதிர்க்கைகளை நீட்டி
காலையுணவு துழாவ,
ஒரு பேதைக்குயில் –
ஒற்றை அரசமரக் கூட்டிடையில்
ஒரு குச்சிமுனையில்
ஊசலாடிக் கொண்டே
தன் மிச்ச உயிரை
தியாகிக்கும் நிலையில்
அண்டபேரண்டங்களுக்குள்
பிரளயம் புகுந்துவிட்டதாய்
கண்களில் சீவனை கருக்கினதாய்
ஓலமிட்டு...ஓலமிட்டு
வெளிக்காக
விளித்துக் கொண்டிருந்தது.

—இடையில்,
சரசரவெனப் புகுந்த அணில்
சரசரவெனவே நின்றது.
அணிலின் தொனியில்.
"ஓ!
என்ன சுகமான சுருதிலயம்!
பொருளறியாயினும்
புரிந்து போனதுன் இசை.
கன்னங்கருகுயிலே!
கீதமிசைப்பாய்!
என் நெஞ்சில் தேனின் கதகதப்பு,
நீ கீதமிசைப்பாய்!
வேறொன்றும் விளம்பிட
விருப்பமில்லை! வேண்டியதில்லை!
ஓ! நீ கீதமிசைப்பாய்!"

தொடர்ந்து தொடர்ந்து
ஓலங்கள் உருண்டன.
கண்ணீர் வனங்கள் கண்டன.
கூடு அதிர்ந்தது! கிளைமுறி நிலை!
வனம் சாகும் வேகம்!
பிரளயத்தின் பிறாண்டல்!
படைப்பாளி கேள்விக்குறியுடன்
பறந்தான்.

‘‘ஏ! ஒற்றைக்குயிலே!
(ஏகவசனம்! எனினும்
எதிர்க்கமுடியாத பயம்.)
நீ
வெளி விளிப்பின்
வேகத்தில் கதறுவதாயின்
உனக்கு
கண்ணீரும் கண்ணும் போகட்டும்;
குரலும் கரைந்துவிடட்டும்.
நீ சும்மாயிருப்பாய்!’’

‘ஹ! யாரடைக்கப் போகின்றார்
ஏகாந்தத்தை கரிக்குள்! நீயா?
அடைத்தால் நீயில்லையே!

படைப்பாளி வெட்கினான்.

‘இன்னம் பெரிய குரலெழு!
நானும்
ஞானம் தாபிக்கலாம். சரியா?
ஊஹூம்! பதிலில்லை.

மறுபடியும்
ஓலமிட்டு...ஓலமிட்டு.
அப்போதும் அவையறியா அணில்
'ஆகா!'
அருமையின் அருமை இசை!
இப்போது பிரளயமில்லை!
படைப்பாளியில்லை!
இசையலையின்
அகடு முகடோ எதுவுமேயில்லை!

அந்த சௌந்தர்ய வெளியில்,
அணிலும்.
குயிலின் சத்தியகீதமும்தான்.

○ ‘ஊர்கின்ற கால’ மொரு பாம்பு.
தனிப் பொந்தில்லை; புற்றுமில்லை.
ஊரமட்டும் தெரிந்தது.
எங்கேயும் தனியே வசிப்பதில்லை;
எல்லாவிடத்தும் வசிக்கின்றது.
நிற்பதில்லை;
நிற்பது என்பது புரியாதது.

உணவு கவலையில்லை.
இலை, பூ, காய் - சருகுகள் மூடின
பூமி வழியே, மரங்கள் வழியே
நீர் வழியே, மண்மூடின நிலையில்
வெட்டவெளியில்
நகர்ந்து கொண்டேதான் இருக்கின்றது.
முட்டையிடும்
பிரக்ஞையில்லை; தேவையில்லை.
அசைவுக்குள்ளேயே
அத்தனை முட்டைகள்; சுவடுகள்.

பிறந்ததிலிருந்தே
பாம்பின் தடங்களை மட்டும்
கவனித்த குரங்கொன்று
பின்பற்றியது சுவடுகளை.
அவை தேயாதவை.
குரங்கும் பின்பற்றி,
மூச்சிரைத்து, முகம் வியர்த்து,
ஓடிப்பார்த்து
அலுப் பெடுப்பதற்கு முன்னமே

**'செத்தது'**

ஆனாலும் இப்போதும்
பாம்பின் சரசரப்பு.
சந்திப்பேயில்லை.

குச்சிக்கால்களை
பூமியில் நடவுசெய்து
தீத்தேடி தினவுதீரா ஏக்கத்தோடு
நின்றதொரு
நெருப்புக் கோழி!
பெரிய தொங்கும் கொண்டை
சிவப்புச் சின்னம்மாதிரி.
சுற்றிலும் ஒரே
சங்கீத மண்டலம்.
அகழமுடியாதொரு
நாதக் கலவை.
அதன்சுவட்டில் – தேடும் தீயில்லை.
சுற்றியிருப்பதே – தற்போதய தீ.
தின்றது நாதத்தை
தீயாய்.
எனின் நாதமும் தீயே.

நாதமும், அற்றநிலையும்
பற்றிக்கொண்டபின் - விடுவதில்லை.

—4—

○ செம்படவக் குடிசையின்
வெளியிலொரு ஆரவாரம்.
கடலை நம்பி
தரையிலே
வாழ்கின்றவர்களுக்குள் பேராவல்.

கடல் நடுவில்
தோணியில் நின்று
அகழமுற்பட்ட
தலைவனுக்கோர்
தனிக் கலக்கம்.

நடுவில் குடிசையில்
பெட்டிக்குள் அடைபட்ட
நன்நாகத்தின் சீறல் போன்று,
தலைவிக்கு
கதறலுடன் வெளிப்பட்டதொரு
மானுடக்குழந்தை.
பிறந்தபோதே வான் வெளியைப்
பார்த்தொரு ஒளிவடிவைப் பிடிக்கப்
புதுத் தொடர்பு.

வெளியெழும்பி, வெளியெழும்பி
உள்ளுக்குள் விஸ்வருபம்.
அதன் பருமனில்
உள்ளுக்கும் வெளிக்கும்
போராட்டம்.
வெளி நீட்ட, வெளி நீட்ட -
ஒளிவடிவம் நீண்டு கொண்டே.
முடிவுமில்லை; சலிக்கவில்லை.
திடீரென
வளர்ச்சியின் விளிம்பில்
பூமியைப் பார்க்கையில்
தானே
அந்த ஒளிப்பிழம்பு.
சுவடு
தேடத் தேவையற்றது.

○ தோணி செலுத்துகின்றவனுக்கு
மீனிடம் குளிரைப்பற்றி
கொஞ்சம் உரைக்க ஆவல்.

வெளியெடுத்தான்.

அதற்கு சொல்லாமலேயே
அந்திமக் குளிரெடுத்தது.
திரும்ப நீரிலிட, குளிர்ந்தே போயிற்று.
நீந்திய சுவடில்லை.

○ குயவன் தன்
கை மண்ணுக்கு
ஆமை வடிவம் அளிக்க
உயிர்த்துப் போயிற்று.
இது முதல் உறக்கம்;
உண்மை பதுக்கி உறக்கம்.

கொஞ்ச கொஞ்சமாய் வளர்ச்சியில்
உறக்க ஆழ்நிலையில்,
கலவி இன்பம் கண்டு,
முட்டையிட்டு, பொரித்து,
நீருக்குள் முயங்கி......
இப்படி நிறைய......
பின்னால்
உறக்க நிலையிலேயே தூக்கவிழிப்பு.
விழிக்க
முயற்சி, முயற்சி, முயற்...முய...

வெளித்தீக்குள்
மாட்டிக் கொண்ட நிலையில்,
மறுபடியும்
குயவன் கைமண்ணாய்,
கருப்பாய்,
ஆமையான சுவடே இல்லை,

○ சின்னப் பையன்
காரணந் தெரியாமலேயே
திருவோடு ஏந்தி
ஏதேனும் பிச்சையாக வேண்டுமென
தெருத்தெருவாய்ப் போனான்.
அங்கங்கே
கிடைத்ததில் திருப்தியில்லை.
தேடுவது
எதுவெனவும் தெரியவில்லை.
தினம் தினமும் இப்படியே.
பின்னொரு நாள்
தன்வீட்டிலேயே
தேடிக் கேட்டான்.
தன்னிடமும் பிச்சை கேட்டான்.
பின்னால்,
திருவோட்டின் சுவடில்லை.

தேடினது
'அவனை'த்தான்.

○ சந்தோஷத்தின் பீய்ச்சலும்,
பிச்சைக்காரன் தொழுநோயும்,
நிறங்களுக்குள் அமிழ்ந்த சகதியுமாய்,
ஊர்த்திருவிழா.
உள்ளூர் அறிந்த
வெளியூர் அம்மாள்
தன் குழந்தையைக்
காணாமற் போக்கினாள்.

நெஞ்சில் ஏதோ
அறுந்து கசிவதாய் வேதனை.
திருவிழாவிற்குள்ளேயே தேடல்.
பின்னர்
தெருத்தெருவாய் தேடிப் புறப்பாடு.
ஊகூம்! இல்லை,

ஊர் முழுக்க
திருவிழாத் தேராய்
அவள்கண்கள் ஊர்வலம்.
கிடைக்காத கணத்தில் தன்
முலையையே வெட்டிப் போடும்
மூகாவேசம்.
செய்வதெல்லாம்
தப்பாகத் தோற்றம்.

முகம்
கறுத்து, வெளிறி, சிவந்து நிறைய.
தெருப்புழுதி ஒட்டினது மிச்சம்.
நின்றாள்; நகரக்கூடவில்லை.
பின்னால் ஓடி
சங்கமத்தில் குழந்தை.
சுவடாய் அவளே குழந்தை.

○ ஓர் விதிக்குட்பட்டதான
ஆற்றின் பிரவாகத்தின்
விளிம்பில் பரிசில்கள்.
அங்கேயொரு
பெரிய பிரசங்கம்.
மேடைகளில்லை; தோரணங்களில்லை;
செய்தி மட்டும்.
செய்தியின்
ஆவலில் தூண்டப்பட்டு
'நான்' மட்டும்.

பிரபஞ்ச குதிரை பிரசங்கித்தது.
'உலகின்
சர்வ ஜீவ தலைவனே!
மனுஷ்ய குமாரனே'
என் கோரிக்கைப் பிரசங்கம்.
என்னுள் நீயும்,
உனக்காய் நானும்
கட்டுறுத்தப் பட்டிருக்கின்றோம்.
என்னை வணங்கிப் பயனடைவீர்!
என்னை மங்கலத்தால் நிரப்புங்கள்!

ஆற்று நீர் இடைமறித்து–
ஜீவிக்கின்றவர்களே!
நான் உங்கள் ஜீவஓட்டம்.
என்னை வாழ்த்துங்கள்!
வாழ்ந்து விடுவீர்கள்!

அவசரத்தில்,
ஒளி என்பெயர் விளித்தது!
சௌந்தர்யனே!
நான் இருளின் காதலன்!
உன்னுள் நிறங்களாகின்றேன்!
சுவை கூட்டுகின்றேன்!
விதங்களாகின்றேன்!
ஜீவகோடிகளின் பிரீதிக்கு என்னை
உட்படுத்திக்கொள்!
நீ உயிர்ப்பாய்!

முடிப்பதற்குள் சொற் சதங்கை
முன்நெற்றி
முன்னே சலசலத்தது!
'வெளி' வேகமாய் 'விளித்தது!
நான் எல்லாரிடத்தும்
அன்பு வெள்ளமாயிருக்கிறேன்!
எனது மாயவிளையாட்டெனினும்
மனிதர்களை நேசிக்கின்றேன்.
தேவர்களும் தோற்கும்
ஆனந்த சுருதியை
உம்மிடம்
எப்பொழுதும்
கூட்டி வைப்பேன்!
என்னை நினைத்திடுங்கள்!
நியாயப் படுவீர்கள்!

'நான்'
ஏதோவொரு சுதந்தரித்த பறவை
ஒரேநேரம்
வேடன் வலை,
குறவன் கவண்கல், ராஜன் அம்பு
இவற்றின் குறியிடை தவித்ததானேன்.

முதற்பிரசங்கம் ஒரேமயக்கம்.
கொஞ்சம் தெளிவு; பின்னாலும் கோபம்;
தாண்டவம்.
அப்பாலும் ஒரே வெறி.

ஊழியின் அவசரத்தில்
ஊழியனாய்
அந்தரான்மா!
உண்மையான நீ,
சலனத்திற்கு கட்டுப்படாத
உண்மையில் தோய்ந்திருப்பாய்.
இருந்தேன்.
'அன்' அதானது.

பின்னால்,
காலம் இல்லை;
ஆறு சலசலத்தது;
சூர்யஒளி துளைத்தது!
காற்று மௌனித்து,
வெளிசிரித்து
பின்னால் அடக்கம்.
தடங்கள் மட்டும்.

○ உணர்வால் மட்டும்
தொட்டுத் தெரிந்து கொள்ளும்
இந்த உலக சப்தஇசை
அந்த சாம்பல் கூத்தாடியின்
கால்தண்டைக்குள்
அடக்கம்.
மனிதனின் துடிப்பொன்றே
ஸ்வர ஆரம்பம்.

மாறி மாறி நகரும்
ஜதிகளிடை,
துரித கதியில்
முகூர்த்தங்களால் பிணைக்கப்படாத
தேவராகத்தில்.
உணர்வையும் தாண்டி,
ஸ்தூல, சூட்சும வெளிப்பாடின்றி
அதி உன்னதமாய்
தொடரும் தாண்டவம்.
அண்ட பேரண்ட
அதிமகா வெளியனைத்திலும்
அதிர்வுமயம்.

அதிர்ந்த இசையனைத்தும்
சாம்பல் கூத்தாடியின்
தண்டைக்குள் அடக்கம்.

சிலசமயம் ரூபதரிசனம்.
ஸ்வரம் குறைந்த நிமிடம்
மாற்றம்.
வரைய முடியாத
நிலைக்களனில்
நித்திய, அநித்திய பேதகோரம்.
முழுமையில்,
அதுவொரு தேவராகம்.
சாம்பல் கூத்தாடியின்
கால்தண்டைக்குள் அடக்கம்.

**சுவடுகள் காலத்திற்குட்பட்டதில்லை.**

**பேச்சு**

முகவாசலின்
முழுநேர வசந்தம்!

மனிதச் செய்தித்தொடர்பு
நிலையத்தின்
நிலையான சாதனம்!

மானுடத்தின்
முதல் பரிமாணம்.

மனித உணர்வலையை
ஒலிபரப்பும் வானொலி!

சிலருக்கு
பேச்சு கலை! ஆனால்
எல்லார்க்கும்
பேச்சு வாழ்க்கை!

பேச்சு என்பதொன்று
பிரணவத்தினின்று
புத்துயிர் பெற்றதோ
அன்றி,
பரமனின் உடுக்கையினின்று
வெளிப்பட்டதோ?

எதாயினும்,

'பேச்சு'க்கு
மனிதன் அவசியம்!
மனிதனுக்கு பேச்சு
அவசியம்!

மொழிக்கு
பேச்சு அவசியம்!
ஆனால்
பேச்சுக்கு
மொழி அவசியமில்லை!

மௌனப் பள்ளத்தாக்கின்
அதிர்வுகள் கூட
பேச்சுத் தானே!
'கரு' வூரினின்று
வந்துபோவோரெல்லாம்
திறந்து சொல்லும்
மழலையும் கூட
பேச்சு தானே!
சிலருக்கு
பேச்சு கலை! ஆனால்
எல்லார்க்கும் பேச்சு
வாழ்க்கை!

'அகம்' அற்றது
தத்துவம்!
ஆனால்
'அகம்' பேச்சுக்கு
அவசியம்.

—5—

சௌக்கியமா? விசாரிப்பு.
பின்னால்
சுடுகாட்டுச்சங்கு ஊதல்.

காரியம் முடியும் வரை
மரியாதைப் பேச்சு!
முடிந்த பின்னால்
மரித்தவர் போல் பேச்சு!

அக்கிரமப் பேச்சு
ஆத்திரப் பேச்சு
இடித்துரைக்கும்பேச்சு
ஈகைப்பேச்சு
உண்மைப் பேச்சு
ஊக்குவிக்கும் பேச்சு
எக்களிப்புப் பேச்சு
ஏமாற்றும் பேச்சு
ஐயப் பேச்சு
ஒப்பனைப் பேச்சு
ஓதுகின்ற பேச்சு
ஔடதப் பேச்சு
—ஆக
பேச்சு மானுடத்தின்
உயிர்மூச்சு.

தலைவரை வாழ்த்தி
பலரையும் வாழ்த்தி
மேற்கோள் காட்டி
உண்மையை மறைத்து
போலிதடவி
நன்றி சொல்லி
நகர்வது—
சிலருக்கு
பேச்சுக் கலை.
ஆனால்
எல்லார்க்கும்
பேச்சு வாழ்க்கை.

மேளங் கொட்ட, வரிசங்கம்
நின்றூதவென நாட்கள்
பல கனவுகளாய் – கைப்பிடித்த
புது உறவுகளின் நினைவுகளில்
ஊர்வலம் போனாளொருத்தி.

போனவள்
போனவேகம்
வந்து நின்றாள்
மூன்றாம் மாதம்!
பெயரில் 'வாழாவெட்டியெனும்'
பதம் ஒட்டி.

'வயிற்றில் வேறு;
தகப்பன் யாரு?'
எதிர்வீட்டு எக்களிப்பு.

யாருக்கு
முந்தானை விரிப்பு?
பக்கத்து வீட்டு
பார்வையாலே விசாரிப்பு.
பெற்றவர் பேச்சில்கூட
சந்தேகத் துடிதுடிப்பு.

பேச்சு எடைகற்கள்
உயிரை விலைபேச
வாழ்க்கையை
விதவையாக்கினாள்.

—ஆக
பேச்சு
சிலருக்கு கலை;
பலருக்கும் வெட்டிப்
பொழுதுபோக்கு.
சவக்குழி
சிதைநெருப்பு
தயாரிப்பு.

அடுத்தவனெல்லாம்
அயோக்கியம்!
எதிர்ப்பட்டவனெல்லாம்
ஏமாளி!
பிறன் வீட்டானெல்லாம்
பைத்தியம்!

ஆக
தன் பேச்சொன்றே
தவறாத சத்தியம்!

பேச்சு
பற்றின
என் பிரசங்கத்திடை
இருட்டாய்,
யாரோ உருவம்,
இடுகாட்டுக் கல்லறையினின்று
எழுந்து வருவதை
அறிந்து அலறினேன்.

வேறுயாருமில்லை!
நம் இந்தியன் தான்!

வெளிநாட்டுப் பெருமையை
வியந்து வியந்தே,
உள் நாட்டுக்குள்ளே
ஒருத்தரையொருத்தர்,
துரத்தி வீழ்த்தி,

தன் சாதி கொண்டு
சாதிப்பதாக
மோதிக் கொண்டு,
வக்கிர அழுக்கில்
தோய்ந்த கருப்பில்,
பேசிய பேச்சுகளின்
கல்லறையினின்று
எழுந்து பேசலானான்!

'நான்
அன்றே,
வெட்டிப் பேச்சில் சமாதியானேன்!

'நீயானும்
நிறுத்திக் கொள்! நின்
பேச்சைப் பற்றின
பிரசங்கத்தை!' என்று.

ஆக,
சிலருக்கு
பேச்சு கலை! ஆனால்,
இந்தியனுக்கு
பேச்சு வாழ்க்கை!

**இணைவிக்கு......**

இந்த
மனித மரங்களிடை
திசை தெரியாத
தாபக்குயிலாய் நான்
திகைத்து நின்ற போது......

நீதானே
நீதானே
என் உயிரை
உற்பத்தி செய்தாய்.

இந்த
பாலைவனத்துள்
பார்த்தறியாத பூஞ்சோலை
நீ - என்னை
பார்வையாலேயே
சேதப்படுத்தினாய்.

இந்த
காடைவனத்துள்
ஆந்தைகளே அலறிக் கொண்டிருந்தபோது
என்
இதயக்குயிலோசை எப்படி
உனக்குள்
அர்த்தமானது?

நீ
எடுத்து வைக்கும்
ஒவ்வொரு அடியும்
என் மார்பில் தானோ?

எனக்கு
மூச்சுத் திணறுகின்றது!
தயவு செய்து
நீ
அப்படி நடக்காதே!

என்னால்
பொறுக்க முடியவில்லை!

தயவு செய்து
உன்பார்வையை
உனக்குள்ளாகவே பூட்டிக் கொள்!
எனக்குச்
சந்திக்க சக்தியில்லை!

உன்னுடைய
உரையைக் கேட்டபின்னால்
என்னுடைய மொழி
எனக்குத் துரோகம் செய்துவிட்டது?

இனி
உன்னிடந்தான்
அகரத்திலிருந்து
ஆரம்பிக்க வேண்டும்!

ஆரம்பமும்
உன்னைப் பற்றியிருக்க
எனக்குள் ஆசை!

ஆரம்பிக்கின்றேன்!

**அன்பே!**
**உன்னைக் காதலிக்கின்றேன்!**

**ஓ சந்திக்கப் போகின்றேன்!**
**ஒரு நாளில் உன்னை நான்....**

முகூர்த்தங்கள் குறிக்கப்படாத
முன்னிரவில்....
நாழிகைகளை மறந்துவிட்ட
நடுநிசியில்
வினாடிகள் வீணாகிப்போன
வித்தியாசமான வேளையில்....

ஓ! சந்திக்கப் போகின்றேன்
ஒரு நாளில் ராத்தரியில்
உன்னை நான்....

பிறந்ததிலிருந்தே
பழகி விட்டேன்
உன்னை நேசிக்க....
அதனால் தான்
பிரியாத இருளில்
பத்து மாதத் தவமிருந்தேனோ
தனியாளாய்...,

என்
உயிர்ச்சத்தம்
விடியற்சேவலாய்
வேகமாய் கேட்டபோதே....
புரிந்து கொண்டேன்.

ஓ! சந்திக்கப் போகின்றேன்
ஒரு நாளின் ராத்தரியில்
உன்னை நான்....

துன்பத் திராவகத்திவிலைகள்
தீண்டின போதெல்லாம்
உன்னின் இந்த
அணைப்புக்குத்தான்
ஆயத்தமோ
எனவொருநாள் எண்ணியிருந்தேன்.

அந்த வேளையில்
என்
மனசின் இமைகளில்
உன்
உதடு பதிவதை
உதாசீனப்படுத்த முடியாது.

இப்போதுதான்
நிதர்சனம்....
நீ என்
நிஜமான காதலி என்று.

அப்போதெல்லாம்
அஞ்சிவிடுகின்றேன்!
ஏன்
என்னை நீ
காதலிக்கின்றாய் என்று!
ஒவ்வொரு ராத்திரியும்
உறங்கிய பின்னால்
ஊர்வலக் கனவுகள்!

ஆனால்,
நீ தரும்
நித்திரையில்
நிஜக்கனவே
நீர்த்துப் போகுமாமே?

சலனங்கட்குட்படாத
ரகசியங்கட்காட்படாத
நிறமியாய்
நான்
நிற்கும் பொழுதோ அது?

இந்த யாத்திரிகன்
வேறு தேசம்
மாறிப் போவான்!

உதவி
உன்னுடையதுதான்!
இந்த நிமிஷங்களில்
நானும்
உன் காதலன்.

ஆத்மா
அந்தரத்தில்
அந்தரங்க சுருதியில்
அவாவுகின்றது
உனக்காக....

என்
மகர ஓசையே – ...
முடிவின் ஆசையே – ...
ஓ! சந்திக்கப் போகின்றேன்
ஒரு நாளின் ராத்திரியில்
உன்னைத்தான்.

உன்னைத்தேடத்
தேவையில்லை.
தேடினாலும்...
விலாசம் தெரிந்த
விலாசமில்லாத வியாபாரி நீ!

தேடத் தேவையில்லை!
ஓ! நீ வருவாய்!
நாசிகள்
சுவாசக்களைப்பினின்று
சுதந்திரித்தபோது....

நெஞ்சம்
நாடிச் சுத்தியலை
நகர்த்த மறந்தபோது....

இறக்கையே இல்லாது
பறக்கத் தெரியாது
நான்
வெளியை விளித்தபோது....

நீ
அணைப்பாய்!

பிறகு
பறக்கத் தெரியும்!
இறக்கையும் இருக்கும்!
இந்த யாத்திரிகன்
பிறிதொரு தேசம்
மாறிப் போவான்!

நானும்
உன் மாதிரி.....
ஓ! சந்திக்கப் போகின்றேன்
சகாப்தத்தின் தேசங்களை...

உன்னை யொருநாள்
சந்தித்த பின்னால்...

## அமியும், உரலும்

ஊர்ந்து போன
'பல்லி'யை பிடித்து
வால் நறுக்கி
மல்லாக்க படுத்தினதாய்,

அன்றி
குத்துச் சண்டை வீரனொருத்தனை
குப்புற வீழ்த்தின மாதிரி
கொல்லை குறட்டோரம்
அம்மி.

முட்டாளின்
மூளையைத் தேடவேண்டி
தலையைக்
குழித்தெடுத்த மாதிரி
பொளிந்த கல்லுரல்.

வேனிற்காலம்
வெயில் தினவு
தீர்க்க வேண்டி
சீராய் உராசும்
எருமை மாதிரி
குழவி
குழைந்து, வழிந்து
அம்மி மேலே யொரு
ஆர்ப்பாட்டம்!
முக்காலங்குல குழியில்
மூணுமரக்கா அரிசி
அல்லற்படும் நயம்; அழகு.

தன்
முயற்சியிற் தளரா
விக்ரமன் மாதிரி
இடக்கை
ஆட்டி அரைத்து
வெளித்தள்ள
முருங்கை வேதாள
வலக்கை மறுபடி
உலக்கைக் கடிதள்ளும்.

எல்லாம் ரசனையாய்
நினைத்த பாவனையில்
பொக்கைக் கிழவி
அசமஞ்ச ஆட்டுரல்
மாவைக் குதப்பும்!

காலக்கண்ணாடியில்
புதுரசம் பூசினதில்
உண்மையை
உரக்க தியானிப்பதுபோல்,
ஜீவ ஓட்டம்
பளிச்சிட்டு
உஷ்ண வேக
'லாவா' போல
அம்மியை மிதித்து,
மறைத்து
அமர்ந்தது மிக்ஸி!

பின்னால்,
அனுமதியா நஷ்டத்தில்
ஓடும்
கம்பெனியின் கதவடைப்பில்
உதிர்ந்து போன வேலையாள்களாய்
அம்மியும், உரலும்
வெளியேற்றம்!

ஸ்வயத்தை பதுக்கி
புறத்தை சுவைக்க அரைத்து,
சுவைக்க மறந்து
கடித்துத்துப்பின
தாழ்வுணர்ச்சியில்
தன்னை
வெளியே தேடி
உள்ளூர தொலைத்த

பல
யுகக் கல்லூரல்களை
எந்த 'மிக்ஸி'
சத்தியம் அறைந்த
சத்தத்தில்
மாற்ற வரும்?

ஆனாலும்
மனசு பேசும்:

கல்லோரல், அமிக்கான
பாந்தம்
எதுக்குவரும்?
மிக்ஸி
வராத, இல்லாத
நேரத்துக்கு
தேவைதான்
கல்லுரலும், அமியும்,

## தேடக்கூடாத ஆன்மா

○ கிளி குதூகலிக்கின்றது.

கூண்டை விட்டு வெளியில்
குடியேறப் போகின்றேன்

ஐயோ!
கூண்டை விட்டு
குடியேற்றப்பட்டேன் என்று
கதறுவதில்லை!

○ கூண்டு விளக்கின்
கடைசி ஒளி
கெஞ்சுகின்றது

காற்றே!
என்னை அணைத்து விடாதே!
தயவு செய்! என்னை
அணைத்து விடாதே!

காற்று சொன்னது:

கவலைப்படாதே
நீ அணைவதில்லை!
ஏற்றி வைத்தால்
நீ
எரியத்தான் போகின்றாய்!

○ மழையின்
மனசில்
புதுக்காதல்
பொரியும் வெயிலின் மேல்!
பொழிந்தான் திடீரென.
தாங்காது போன்
வெயிலின் ஆன்மா......

அந்தோபாவி
'அவன்
என்னை
எதிர்த்துக் கொல்கின்றானே!
அலறிற்று.

இப்போது
மழையின்
மூளையில்
புதுக்குழப்பம்.

○ பெரிய தோட்டம்.
பொங்கும் அழகில்
புது மலர்கள்.
பல பறிக்கப்பட்டன
போதி சத்வர் பூசைக்காக.
சில சிரித்தன
சிற்றின்பத்திற்காக.

கீழே விழுந்த
காய்ந்த மலர் சொன்னது:

காலவரையறையில்
கணிக்கப்பட்டு விட்டது ஜாதகம்.

○ அவன்
பிணமாகிப்
பாடையில் வர
பெண்டாட்டி பின்னே அழ
போகின்றான்
புதுப்பாதை நோக்கி.
எதிரே ஒரு
இளந்துறவி
எதிர்ப்பட்டதைக் கண்டார்.

பின் சொன்னார்:
இன்னோர் உலகு
இவனை அழைக்கின்றது.
அவன்
ஆன்மம் அடைகின்றான்.

அவன் சொன்னான்:
சும்மா
சுற்றுலாவாக வந்தேன் - இந்த
சுந்தர உலகிற்கு.
ஆனால்
என்
சுதந்திர உலகு
சுவையானது.

○ ஆலமரத்தடியில்
அருந்துறவி
அமர்ந்திருந்தார்.
அருள்பெற
ஆயிரங்கூட்டம்.

பாட்டி வந்தாள்—
பேரனின் பூணூலுக்குப்
பொருள் வேண்டி.

அரசியல்வாதி வந்தார்—
அடுத்த தேர்தல்
அறுவடையின்
ஆசிக்காக.
அறுவகை ருசிகளில்
அருமையான கனிகள்—
அன்புடன் படையலாய்.

ஓர் ஓரமாய்
ஓர் இளம் ஆன்மா
அழுது கொண்டிருந்து.
அவரையே உற்று நோக்கி....

சின்ன பிரார்த்தனை:

'அருள் ஒளியே!

இந்த முறையாவது
இவ்வுலகில்
எல்லோருக்கும்
பயன்படணும்.
அத்தனைக்கும் பின்
அவர் சொன்னார்.

படைத்ததற்கு
பலன் கிடைக்கும்.
பயன் பெற
பொருள் கிடைக்கும்.
ஆனால்
எல்லோருக்கும்
எல்லாம் கிடைப்பதில்லை.
இதற்குத்தான்
இந்த உலகு.

இத்தனையும் கேட்ட
இறைவன் சொன்னார்:
ஓ!
இங்கே ஒரு வாழ்க்கை
நான்
தேடக்கூடாத ஆன்மா!

## தபாலில் சேராத கடிதங்கள்

பிரியமுள்ள
சிநேகிதியே....

இது
வெறும்
காகிதப்புலம்பல்தான்
உனக்கு.

மௌனம் நீடிக்கும்
ஒவ்வொரு விநாடியும்
மரணம் எனக்கு
மங்கல ஆரத்தி
கரைக்கின்றது.

ஒவ்வொரு விடியலிலும்
அர்த்த புஷ்டியுடன்
ஆயிரம் மாறுதல்கள்.
எனக்கு
ஏன் தேவை
உன்
ஆறுதலில்லாத மாறுதல்கள்?

ஒவ்வொரு ராத்திரியிலும்
தனிமையின் தாங்காத
மோனத்தவம்....
ஆனால்,
தனிமைக்குத்தானா
தாகத்தவம்?

கண்களில்
நெருப்பைச்சூடி
சிநேகிதி உன்னைச்
சித்தமாய்ப்பாடி
எத்தனை ராத்திரி
சங்கமத்தவங்கள்?

என்
உயிரில்லை
இங்கே சிநேகிதியே....
கல்லறைக்குள்
காத்திருக்கு
உன்
உடலுக்காக....

தத்துவம் போதிக்கும்
தனிப்பாவி இருட்டினிலே
எத்தனை நாள்
எனை மறந்தேன்
என் மனசினிலே....

காத்திருக்கேன்
உனக்காக....
காதலியே
சிநேகிதியே....

மௌனக்காட்டு
மறைவினிலே....
மரணத்தின்
வாசலிலே....
உன்னைக்
கொள்ளிடம்
போகும்வரை

கல்லறை கல்லறையாய்
கண்ணீர் மலர்ச்சொரிந்து
சிநேகிதனென்
வழிதெரிய
நினைவில்
நனைத்த
கால்தடங்கள்
கனல் பொழிய
காத்திருக்கிறேன்
காதலியே....
சிநேகிதியே....

வருஷ விருட்சம்
வளர்ந்த பின்னும்
உயிர்ச்சுடர்
கரைந்த பின்னும்
நினைத்துக் காத்திருப்பேன்....

நிச்சயம்
நதி – கடலில்
பிறந்ததில்லை.

அப்படியானால்
உன்
நினைவு நதி?

நிழல்கள்
நிஜமாகும் நேரம்
நிச்சயம் நாம்
உறவினிலே நனைந்திருப்போம்.

கள்ளூறும்
கண்ணில்
இன்றேன்
முள்ளூறும்
மௌனம் கண்ணே?

உன் காதோர
மயிர்ச்சிலிர்ப்பில்
நான்
கண்ட கனவுகளை
இமைச்சிறகு
சொல்லும் கண்ணே!
உடல் விட்ட
உயிரே — நான்
உனக்காக
எழுதுகின்றேன்.

மடலாலே
மனம் திறக்கும்
உன் பாலா

## வன்னிமரம்

வீதியின்
வாயிலில் ஓர்
வன்னிமரம்.

வாழ்வின் வருடங்கள்
பலநூறு இருக்கும்.

குச்சிக்கிழங்கு
விற்குங்கிழவி
செத்துப் பின்னால்
பத்து வருடம்!

காதலனுக்காக
காத்திருந்த கன்னி
கல்யாணமாகிப்
பத்து வருடம்!

பாதையைப்
பதுக்குவதாக
பலகிளைகள் வெட்டி
பலபல வருடம்!

நிழலில் இருந்து
இஸ்திரி போடும்
இசக்கிமுத்து
பேரனெடுத்து
பலப்பல வருடம்!

நிழலுக்காக
நின்ற மாடு
நல்ல கன்றுகள்
ஈன்று இறந்து
பத்து வருடம்.

இப்படி
பலப்பல
பத்து வருடம்.
—அப்படியும்
வீதியின்
வாயிலில்
வாழ்க்கையைத் தொடரும்
வன்னி மரம்!

○ சிங்கள இலங்கையின்
வீதிகளில்
வாழ்க்கை மொத்தமும்
போராட்டம்!

கல்லூரி
விடுதிப்பெண்களுக்கு
உடற்தோல் மட்டுமே
மறைத்துகில்கள்!

சிங்கள
காவல் நிலையம்
கற்பிழந்து
அக்கினிப் பிரவேசம்!

தண்டனையாய் சில நூறு
தமிழ்ப் போராளி
உடல்கள் 'பொத்தல்'!

வீதியுள்
வாழ்க்கை மொத்தமும்
போராட்டம்!

சிவப்பு ஆற்றின்
மனித பாலங்களின்
முறிவு
வீதியுள்
சடசட சத்தம்!....
வீட்டுச் சுவர்களுக்குக்கூட
வியர்த்தது.

விதியால் துரத்தி
மதியைத் தொலைத்தவர்
வீட்டினுள்
சிவன் மட்டுமே
சிரித்தாட்டம்!

மழலையோடு வாழ்ந்த
குழந்தைகள்
மரணத்தோடும்
போராட்டம்!

வீதியில்
வாழ்க்கை மொத்தமும்
போராட்டம்.

தமிழ்ப்பையன்களின்
புத்தகப்பையில்
பீரங்கிகுண்டுகள்!

தமிழ்ப் பெண்கள்
தீவிர சிங்கள
நாய்களுக்காக மட்டும்
கருத்தரித்தார்கள்!

வீதியில்
வாழ்க்கை மொத்தமும்
போராட்டம்.

**○ ஆக -**
**ஈழப் போராட்டம்**
**வன்னிமர**
**வாழ்க்கையோட்டம்.**

## இன்று விடுமுறை நாள்

ஆகா!
இன்று விடுமுறை நாள்
அந்த
சந்தோஷ வருடங்களில்
வாழ்ந்துவிட்ட பெருமையில்....

ஆகா!
இன்று விடுமுறைநாள்!

சட்டத்தைச்
சட்டம் போட்டு
மாட்டி வைத்து விட்டோம்.
வரதட்சணை என்ற
வார்த்தைக்கே
வாய்ப்பூட்டு பூட்டி விட்டோம்.
பெண்ணின் பெருமையை
பிரகடனப்படுத்தி விட்டோம்.
ஒவ்வொரு செயலிலும்
உண்மைத்துவம்
ஓங்கி நிற்கின்றது.

ஆம்!
இன்று
விடுமுறை நாள்
நமக்கு!

அவரவர் பேச்சில்
ஆன்ம ஒளி
அழகிடுகின்றது.
ஆகா!
கண் கொள்ளும் காட்சி.

எல்லோரும் மன்னராய்,
எல்லோரும் தலைவராய்
இன்னும்... இன்னும்...
சாதித்து விட்டோம் என்ற வார்த்தையையே
சாதித்து விட்டோம்.
பிச்சைக்காரர் என்பவர்
பிச்சையெடுத்தாலும்
ஒரு வீட்டிலேயே
உண்டி நிரம்பி வழிகின்றது.

இனி,
வேலை செய்ய
வேண்டியதில்லை!
வேண்டிய மட்டும்
வேலை செய்தே
வென்று விட்டோம்!

எல்லோரும் மகாத்மாவாய்,
எல்லோரும் நேருவாய்
யாரை
யார் கும்பிடுவதென்று
எவர்க்குமே புரியவில்லை.

அரசியல்வாதியெல்லாம்
'கதர்! கதர்!' என்று
கதறுகின்றார்கள்.

உலகில்
வல்லரசு என்ற
வார்த்தையே
விண்டு போய் விட்டது.

அனைத்துக்
கட்சித் தொண்டர்களெல்லாம்
காணும் போதெல்லாம்
கட்டித் தழுவுகின்றார்கள்.
ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி....
அடையாளமே தெரிவதில்லை.

தேவியர் படங்களெல்லாம்
தேட வேண்டியதில்லை;
பார்க்கும்
பெண்களின்
பாதங்களையெல்லாம்
பூசிக்கின்றார்கள்.

பிதுங்கி வழியும்
பல்லவனில்
எக்கச்சக்கமாய் ஏறி
வியர்வை எரிச்சலில்....

சே!
என்ன
துர்க்கனவு
தூக்கத்தில்!....

மனிதர்களெல்லாம்
மனிதர்களாகவே
நிஜமாகவே மனிதர்களாகவே....
ஆகா!
வாழ்ந்து வருகின்றார்கள்.
இன்று
விடுமுறை நாள்
நமக்கு...

**கற்பனையில்!**

**பூனைத்தனங்களும் புலிகளும்,**
**புலித்தனங்களும் பூனைகளும்.**

பேரருவியின் சத்தமில்லா
தூரத்துக் காட்சிபோல்
கால்கள் பாவும்.

பின்னால் ஏதோ
கட்டி இழுத்துவரும்
பாவனையில்
அசையாத கொக்கிவளைவாய்
நீளவாலும்
இழைத்த தேக்கில்
'மார்டன்' ஆர்ட்டாய்
உடலும் நகரும்.

தனது தூக்கு தண்டனையை
விமர்சிக்காது
நீதிபதிக்கு மன்னிப்பளித்த
நிரபராதி போலும்
வாய்.

நான் செய்வதெல்லாம்
பரம ஸ்வதந்திரம்
என்று நினைத்து
வெளிக்காட்டும்
நாசி மீசை!

சுற்றி நடப்பதெல்லாம்
வஞ்சகமோ, சூதனையோவென
மன யோசனையிருந்தும்
பிரபஞ்சமே என்னுள்ளாகும்
என்றோர் பாவனையும்
கண்டிப்பாய் தேங்கும்
கண்கள்!

இந்த
சிலாகித்த குணங்கள் எல்லாம்
பூனைக்கும், புலிக்கும்
பூனைத்தன புலிக்கும்
புலித்தன பூனைக்கும்
பொதுவும் போலும்!

பூனையும் புலியும்
பிறப்பில் ஓர் இனமென
விலங்கியல் சொல்லும்.

மனசுக்குள்
நானும்
அந்த இனத்திற்கோர்
பெயர் வடித்தேன்
**—மானுடம்—.**

இங்கே, இதை
திருப்பிப் படித்த பின்னும்
இவர்களுக்கு
தன்னைத் தனக்குத்
தெரியுமோ...?

## எழுச்சி

என்னுயிர் வாணி
இதயக்காதலி
இங்கே வா நீ....

உன்னை
பூவென
பெயரிட மனம் வரவில்லை.

நீ
மனித முகங்களுக்கு
நடுவே முள்ளாயிருக்கவே—
முள்ளாயிருந்து
மனித
முகத்திரை கிழித்து
முத்திரை பதிக்கவே
மிகவும் பிரியப்படுகிறேன்.

காளி
கைவேலாகவே
காண விரும்புகிறேன்.
காதலி....
சாதி சூரபதுமனை
சம்ஹாரம் செய்ய
உன்னை
காளி
கை வேலாகவே
காண விரும்புகிறேன்.

நின்னை
நட்சத்திரங்களின்
நிலாவாக
நினைக்க விரும்பவில்லை.
சூரியனோடு
பகலைப் பங்கிடும்
புதுமை நிலவாக
புனைய நினைக்கிறேன்.

என்
மனசில்
உன்
கனவுகளைக் காணவில்லை.
கனல்களைக்
காக்கிறேன்.

மானுட
மனசாட்சிக்கு குளிரெடுக்கிறதாம்.
கம்பளிச் சட்டையை மாட்டி
கவலையை விட்டார்கள்.

ஏன்
உன்
கனல்களைக்
காக்கிறேன் தெரியுமா?
கம்பளிச் சட்டையைக்
கருக்கி குளிரெடுக்க
கவலையைத் திறக்க....

— 8 —

மாலையில்
சூரியசந்திரப்போர்
சுந்தரமாய் நடப்பதை
சுவைத்துக் கொண்டிருக்கிறேன்.

அந்தப் போரில்
எத்தனை
மேகங்கள்
இரத்தம் சிந்தி
இதயம் கொடுத்தன?
வானக்களம் முழுதும்
வாடாத ரத்தப்பூக்கள்.

வானத்தில்தான்
எத்தனை
சுடலைக் காடுகள்?

போர் நடந்தாலும்
தென்றலின்
சமாதானத் தூது மட்டும்
தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ஆனால் -
காதலி
கதலி புஷ்பக்
கவிதைகளை
காணக் கண்வரவில்லை.

அங்கே ஓர்
ஏழை
எழுதிக் கொண்டிருக்கிறான்—
காலனின் நாட்குறிப்பில்.

அதைத்தான்......
என்னுயிர் வாணி
இதயக்காதலி
இங்கே வா நீ
அதைத்தான்......
அங்கே பாரேன்.

**உயிர்க் கூடு**

இங்கே பார்
இனிய மனிதா!

நான்தான்
அந்த
பெட்டைஇட்ட
முட்டையின் குஞ்சு
வெளிவந்தபின்
'வெறும் ஓடு'

அந்த
பெட்டைதான்
பெட்டை தான்
இட்ட முட்டை என்று
அடைக் காக்குதே தவிர
குஞ்சு வெளிவந்தபின்
குஞ்சைக் காத்த
என்
நெஞ்சைக் காக்குதா
இனிய மனிதா!

அந்த குஞ்சுதான்
நான்
இதுவரை இருந்த
இருப்பிடம் என்றெண்ணிக்
குமைகின்றதா?
கவிமனிதா!

கடைசியில்
குப்பைத் தொட்டிதான்
குலவிளக்கானது!
இதோபார்
என்னுயிர் நண்பன்
'மாங்கொட்டை'.
மண்ணில் விழுந்து
மரமாய்
முளைக்கின்றான்,

இலைகளைத்துளிர்கின்றான்...
கனிகளைக் குவிக்கின்றான்....
மறுபடி -
இவன் தான்
இங்கே விழுகின்றான்.

கனியைக் கொடுத்த
மரம்தான்
மறுகுகின்றதா?

இல்லை...
கனியின்
கதுப்புதான்
கண்ணீர் விடுகின்றதா?
இவனுக்காக...

இதையும் கொஞ்சம்
இயல்பாய் இயோசியேன்!

இதுதான்
இயற்கையின் நியதி
இனிய மனிதா!

சாவிலே கூட
சாதனை உண்டு!

வாழ்க்கை ஒரு
தியாகம்
இனியமனிதா!
அதில்
தியாகம் கொஞ்சம்
தனித்தது மனிதா!

என்
தியாகம் என்னவென
திகைக்கின்றாயா?
குப்பையில் விழுந்தாலும்
கொட்டைக்கு உரமாகி
கனிகளைக் குவிப்பேன்
இனியமனிதா!

## நாய்க்குடைகள்

பாரடா மனிதா!
பாரென்பது இதுதான்!
தான்
ஏற்றி வைத்த விளக்கை
எச்சிற்தொட்டு அணைப்பதை
எதிர்க்காது...
எரிச்சற்படாது!...

என்
காலிலே தூசுபட்டால்
காணாது என
கண்ணாடி செருப்பை
கவனமாய் அணிவிக்கும்!

பாட்டையில் செல்லும்
பாடையும் கூட
பதவிசு மரியாதை
பெற்றுவிடும்
புகழ் கண் திறந்தால்!

சாதிகள் கேளாது
சங்கீதப் பண் இசைக்கும்
உன்பெயரில்—
காசு என்ற
கொலுசு
காலிலிருந்தால்!
பாரடா மனிதா!
புகழ் என்பது
இதுதான்.

ஆனால் –
நீயடா மனிதா!
நீயென்பது
நீதான்!...

## பிரிய காதலருக்கு...

நீயும்
நானாக....
நானும்
உன் நினைவாக

நேசிக்க – உன் பெயரை
வாசிக்க வாசிக்க
மனசுக்குள் கடலிரைச்சல்!

நீயும் நானுமாக
நடுக்கடலில் முத்தெடுக்க
வியர்வைத் தவம் கிடக்க

எனக்குள்
உன்சிருஷ்டி
உனக்குள்
என் பிரபஞ்சம்.

## நாட் குறிப்பேடு

இந்தியாவின்
நிச்சயக் குடிமகன்
நீதான்....

தேதி
பருக்கப் பருக்க....
நீ மட்டும்
நிறைய இளைக்கின்றாய்....

நாளைய
இந்தியாவின்
நிச்சயக் குடிமகன்
நீதான்....

## தப்பிப்பு

தோன்றின
திசையில்
முன்னொரு கால்
பின்னொரு கால் நகர
வசதிக்காய்
இடையிடையே
மூணு! சோடிக்கால் நகர

அட்டத்தில் வாய்
எச்சில் ஒட்டி, நீட்டி
நூல்
காயவைத்திழைபிரித்து
'சர்க்கஸ் பார்' விளையாடினது
சிலந்தி.

காற்றின் தள்ளாட்டத்தில் –
மறுமுனையில்
சுவர்ப் பக்கம்
கால் பதித்து -
இழை அறுகா கவனத்தில்
உடற்பெருக்கி
ஆசுவாசம்!

காற்று வேக ஆட்டத்தில்
கண்டபடி கால்வைத்து
பிரித்த இழைகள்
முடிச்சிட்டு—
மையத்திடை
சிக்கி நின்றது
சிலந்தி.

இந்த
மரண அவஸ்தாபேதமுடிவின்
மறுபுற ஆரம்பம்
சிலந்தி வலையின்
தோற்றம் போலும்.

பிறகென்ன....
நின்ற இடத்தில்
நிம்மதியாய்
பூச்சி பிடித்து
இரையாக்கி
பூரண உறக்க
மௌனம்.

சில
அந்திப்பகல்
பிணக்கத்தில்
நொண்டிக் காலால்
நாள் நகர்ந்த வேகத்தில்
சிலந்தி வலை
ஒற்றமையாய்
பழுத்து உருமாற்றம்.

'எட்டுக்காலி'ன்
சுகவாசம்
காலதேவனின்
ஒற்றடைக் கொம்புக்கு
பொறுக்கவில்லை போலும்.

தன்
கிழத்தனத்தில்,
வெளுத்த முடி
தலை பரத்தி
நீட்டி, ஆட்டி
அலசிப்புரட்டி
நக்கினது.

தன்
உறக்கத்தவம்
கலைந்த நிமிஷம்,
சுதந்திர சாம்ராஜ்யத்தில்
வெடித்த
பிஞ்சுப் பிரளயம்
பொறுக்காது—
'நான்' எனும் சிலந்தி
நாலுகால் மறந்து
ஓட்டம்!...

மறுபடி....—...—..—.
வேறோர் அட்டத்தில்
எச்சில் ஒட்டி
'கூட்டு' வாழ்க்கை!

—கொம்பின் உபத்திரவம்!

—ஆனாலும்—
'நான்' எனும்
சிலந்தியின்
**எஸ்கேபிஸம்.**

## பெண்ணடிமை

பசுக்களின்
எலும்பொடித்து வளைத்து
இரண்டு சக்கரங்கள்..

தோல் மடித்துப்
போர்த்து
இரட்டை மாட்டு வண்டி.

ஒற்றை பசு இழுத்து
வண்டிக்குள் காளைகள்
வேகசவாரி
குடைசாய்ந்தால்
தெரியும்.

**தப்புத்தாளம்...**

நிச்சயம்
இன்றைய காக்கை
இரைக்கு
இனம் அழைக்க
கரைவதில்லை.

கிடைத்தவரை லாபத்தை
கரைந்து கரைந்து
காட்டிச் சந்தோஷிக்கின்றது.

காக்கைக் கரவா
கரைத்துண்ணும்
தப்புத்தாளம்...

## மழை

வானக் கிழத்தி
மேகக் கிழிசல்களை
ஒட்டுப் போட
ஊசி தேர்ந்தெடுக்கின்றாள்.

அத்தனையும்,
காதற்ற
உருப்படியில்லா ஊசிகள்;
கொட்டினாள்.

## பகுத்தறிவு

கதிர்
ஏர்க்கால் நடத்தி
உழுவிய ரவியின்
அழகொளி காணப் பொறாது
ரகசியப் பொந்துள்
அவலட்சணத் தவளை
நின்றவிடத்தில்
பிளந்து மடிந்த
நாக்கை நீட்டி
ஒட்டும் பூச்சிகள் மட்டுமே
உலக உணவெனும் பாவனையாய்
ஒளிந்து வாழ்க்கை.

உழுவின களைப்பில்
மேற்குப் பாறையில்
மயங்கின ரவி
வியர்வையுதிர்த்தான்.

அவன் நட்ட
செடி-முழுசும்
விரிந்த பூவையெல்லாம்
நிலாத்திருடன்
'நகர்த்த' வந்த போதில்—

தவளை கொஞ்சம்
வியர்வை மழையில்
நடைபழக
நாக்கை நீட்டி
பகுத்தறிவுச் சந்தம்
பாடினபடிக்கு
வெளித்தோற்றம்.
'பூச்சிகள் மட்டுமே
உலகுணவு;
மற்ற சிருஷ்டியனைத்தும்
பகற்கனவு'.

சத்தங் கேட்டு
செவியிலாப் பாம்பு
தேங்கின நீரடி
ஊர்ந்து நகர்ந்து
சேற்றில் தன்
நிறமாற்றி குதித்த
தவளையை பின்னால்
தன் வாயிலடைத்து—
வாலை சுழற்றி
சத்தியம் அறைந்த
தோரணையில்
—'எமக்கும் உண்டு
பகுத்தறிவு.
உன்னையும், ஊனையும்
உயிர்வாழ் ஜீவனத்தனையும்
எம்முள்ளாக்கும்
பிரபஞ்ச அறிவு!'
சொல்லின படிக்கு
பிண்ட மாற்றம்.

பின்னும்
—தவளை
மரணமைல்கல்லில்
மோதும் வரை
பாம்பின் குடலில் —தன்
பூச்சி அறிவைப்
புகழ்ந்து பாடினது.

**தரிசனம்**

வீட்டுக் கொல்லையில்
வாயில் கவ்வின
மணற்துகளோடு
நெடுந்தூரம் நடந்து
ஓர் மூலையிலுதிர்த்து
மணல் மலைகள்
உருவாக்கினதில்—

உடைந்த வேனிற்கட்டியின்
பிளந்த வாய் போல,
அன்றி
ஆங்காங்கே,
பிரமனாகிப் படைத்த
தொப்பூழ்ச் சுழிபோல
வாசல்கள் வைத்து
அமைந்தது–புற்று.

குறிக்கப்படாத–
குறிப்பிலடங்கா முகூர்த்தத்தில்
சிருஷ்டிக்கப்பட்ட புற்றிலெல்லாம்
உலகாயதக் கரையானின்
குடியேற்றம்!

பின்னால்,
மா, வேம்பென
பலமரப்
பட்டைஅரித்து
பகுத்துண்டு
இனப்பெருக்கம்!

பட்டைதீர்ந்து
மரம்
படுத்த நிலையில்
ஆசைப்பரி
அடங்காப்பொழுதில்
ஒன்றுக் கொன்று
இரையாகும் வேகம்!

கரையானின்
அட்டகாசத்தில்
புற்றினுடல்
குறுகுறுத்து
மணல் சரிந்து
உருமாறி—
இன்னும் நிறைய...

சத்திய
தரிசன
தாக நாகம்
படங்கொண்டு
புற்றின் முன் ஆடினபோது
பிரபஞ்ச அழகின்
மாணிக்க ஒளிச்சோதி!—
கரையான் உபத்திரவம்
தாங்கா நொடியில்
புற்றின் விளிப்பிற்
வருகை போலும்.

கரையான்களுக்கிடை
மரணவியர்வைக்
கசகசத்து
வேறிடம் தொற்றி—
நாகம் புகுந்த நிலையில்

வாழிடம்
சீர்மை செய்யும்
சிந்தனையில்
பொய்மைப்புழுதி
பறந்த பொழுதில்
மனப்புற்று
மண்ணின்
சரிவுச் சத்தம்!

பின்னும்
ஒரு நாள்
குட்டிகளோடியைந்த
நாகத்தின்
முயக்க நிலையில்—

கொல்லை முழுசும்
சத்திய ஜீவனெனும்
ரத்தினதீபம்!

## சாம்பல் கயிறு

பைத்தியம் பிடித்து
பாயைச் சுரண்டின
இறைவன்
அகப்பட்ட தென்னை நாரை
க்ரியா வேகத்தில்
ஐந்து பிரியாய்
பிரித்து-சேர்த்து
நீளமாயொரு
கயிறுருவாக்கினான்.

மோனச்சூரியனின்
ஊமை வெயிலில்
கயிறதன்
தோற்றத்தில்
புழுங்கி, எரிந்து
சாம்பலாய் அவிந்தது.

வழி நடந்த
மனிதன்
பார்த்தான்:

முதலில்
மூச்சிறுக்கிமயக்கும்
உடும்போவென சந்தேகம்!
பயந்த நிலையில்
நாலடி நகர்ந்ததும்
கயிறோவென
மனசுள் தோற்றம்!

துணிந்து தொட்டதில்,
அடச்சே!
வெறும்- மிச்சமின்றி
எரிந்த கயிறு!

**நமக்கென**

மனசு மரம்
எனக்குள்
நிறைய பூத்திருக்கு.

தொடர்ந்து பல
வயல்வெளி இருக்கு.
பாதை தடத்தோரம்
கொஞ்சம் தரிசு நிலமிருக்கு.

அங்கே
நானும்
நிதமும் தோண்டுகின்றேன்.

அறியாப் புதையலாய்
அன்பே - உன்னை
அணைக்க
மஞ்சம் அமைப்பதற்கா

அன்றி—
உனக்கொரு+
எனக்கொரு
இருக்க இரு
கல்லறையாசனம்
சமைப்பதற்கா?....

நானும்
நிதமும் தோண்டுகின்றேன்.

மனசு மரப்பூவெல்லாம்
தோண்டுகுழிக்குள்
விழுந்திருக்கு.

வரப்போகும்
புதையல் - உன்னை
வரவேற்பதற்கா

அன்றி
உனக்கும்
உனக்குள்ளிருக்கும்
எனக்கும்
மலர்ப்பந்தல்
அமைப்பதற்கா?

தெரியாது...புரியாது.
ஆனாலும்
நானும்
நிதமும் தோண்டுகின்றேன்.

வசந்தம்
வந்துபோனது
வனப்பும், தென்றலும் தந்த
சுகந்தம்
வடிந்து போனது.

காலதேவியின்
கண்களின் உக்கிரம்-
கோடையும் வந்தது.

மனசு மரத்தின்
இலைகள்
பரஞான மோனத்தில்
பழுத்து விழுந்தது.

ஆனாலும்—
எனக்குள் மட்டும்
தோண்டலின் தேடலில்
துரிதம் இருந்தது.

இலையுதிர்கால—
வக்கிரம் போல
எனக்குள்
இன்னம் போராட்டம்
தீவிரம் அடைந்தது.

சாயா தேவி
தன் நிறத்தையே
மாற்றினாள்.

எனினும்,
மனசு மரம்
தொடர்ந்து பூத்தது.
இலைகளும்
மரணத்தை மறுதலிக்காது
பழுத்து விழுந்தது.

மழைக்கால
ஒரு நாளில்—
தோண்டலின்
ஈடில்லாவேகத்தில்
மனசு மரமே

வேர்களைக்
வெளிக்கிளப்பின
நிஜரூபதரிசனத்தில்
பெயர்ந்து சாய்ந்து
குழிக்குள் விழுந்தது.

—'எனது'—
உயிர்க்கூடும்
சரிந்தது.

அங்கே
உனக்கென—
—எனக்கென எனவில்லாமல்
நமக்கெனவொரு
மாளிகையின்
அஸ்திவாரமாய்
அக்குழி அமைந்தது.
பிரபஞ்ச ஜீவனை
உருக்கிச் சமைத்தொரு
உயிர்ச்சுடரதனுள்
ஜனித்தது.

அதன்
அடிக்கல்லில்
என்றைக்கும்
'நமக்கென'

INSTITUT
Acc. No. 89991
Date 16-7-98

பாலாவின் கவிதைகளில் உயிர் துள்ளிக் கொண்டிருப்பதை உணர்கிறேன். ஆழ்கடலின் மையத்தில் தன்னந்தனியாய் மிதந்து செல்வதுபோன்ற அமைதியை மனம் அனுபவிக்கிறது. ஆன்ம தரிசனங்கள் கவிதைகளாய் முகங்காட்டியிருக்கின்றன. இந்தப் பிரபஞ்சத்திற்கப்பால் திரை போட்டுநிற்கும் ஏதோ ஒன்றைத் தேடித்தேடி அந்தத் தேடலிலேயே ஒரு பொன்னொளியை பாலாவின் கவிதைகள் பூண்டிருக்கின்றன. மனிதனிடம் மனிதனைக் காணவும் அதற்கும் மேம்பட்ட ஓர் உன்னதத்தைக் காணவும் கவிஞர் பாலாவின் கவிதைகள் விழைகின்றன. என்னைப் பொறுத்தவரை சொற்களுக்கும், கருத்துகளுக்கும் அப்பாற்பட்ட ஓர்வளரும் அற்புதமே கவிஞர் பாலா.

பொன்மணி வைரமுத்து



Library IIAS, Shiml
T 891.481 41 B 18 N
00089991